# 3. வேளாண்மை, மீன்பிடி மற்றும் காடாக்கல்

## 3.1 உற்பத்திப் போக்குகள்

1997இல் வேளாண்மைத்துறை 3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 1996 இன் தாழ்ந்த மட்டங்களிலிருந்தான மீட்சியினையும் தனியார் துறையின் கீழான மேம்பட்ட முகாமைத்துவம் மற்றும் கவர்ச்சிகரமானதேயிலை விலைகள் என்பனவற்றின் காரணமாக இயக்கவிசை கொண்ட துறையான தேயிலைத் துறையின் மேம்பட்ட செயலாற்றத்தையும் பிரதிபலிப்பதாக இருந்தது. 1996 இன் உச்ச வெளியீட்டு மட்டங்களைத் தொடர்ந்து தேயிலை உற்பத்தி 7 சதவீதத்தினால் அதிகரித்தது. தெங்கு உற்பத்தி மிதமான 3 சதவீதமான அதிகரிப்பைக்காட்டியது. எனினும் முக்கியமாக தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் இறுதிக் காலாண்டின் அதிகூடிய மழை வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக இறப்பர் உற்பத்தி 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இறப்பர் விலைகளும் 1997 இல் கடுமையாக வீழ்ச்சியடைந்தன. உள்நாட்டு வேளாண்மைத் துறையில் விளைச்சலில் காணப்பட்ட மேம்பாட்டின் காரணமாக நெல் உற்பத்தி 9 சதவீதத்தினால் அதிகரித்தது. ஏனைய வேளாண்மைப் பயிர்கள் கலப்பான செயலாற்றத்தினைக் கொண்டிருந்தன. மிளகு, கராம்பு, கறுவாப்பட்டை சிற்றனெல்லா என்பனவற்றின் உற்பத்தி 1997 இல் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. துணை உணவுப் பயிர்களில் பெரிய வெங்காயம், எள்ளு, நிலக்கடலை, சின்ன வெங்காயம் என்பன உயர்ந்த வெளியீட்டு மட்டங்களைக் காட்டிய வேளையில் 1996 இல் இறக்குமதிகளுக்கான உரிமங்கள் நீக்கப்பட்டமையின் காரணமாக அதிகரித்த உற்பத்தியாளர் செலவின் காரணமாக சார்பு ரீதியாக இவற்றின் கவனக் குறைவினால் மிளகாய், கிழங்கு என்பனவற்றின் வெளியீடு வீழ்ச்சியடைந்தது. வட மாகாணத்தின் வேளாண்மை நடவடிக்கைகள் கிட்டத்தட்ட முன்னைய நிலையை அடைந்தன. வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் சில இடங்களில் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டமை மற்றும் நன்னீர் மீன் உற்பத்தி அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக 1997 இல் மொத்த மீன் உற்பத்தி 5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1**

**முக்கிய வேளாண்மை விடயங்களின் உற்பத்தியும் விலை மாற்றங்களும்**

| விடயம் | அலகு | உற்பத்தி | | 1996/97 இல் மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | | 1996 | 1997 | உற்பத்தி | விலை |
| தேயிலை | மில்.கி.கி. | 258 | 277 | 7 | 15 |
| இறப்பர் | மில்.கி.கி. | 113 | 106 | -6 | -17 |
| தெங்கு | மில்.காய்கள் | 2,546 | 2,613 | 3 | 26 |
| நெல் | '000மெ.தொ. | 2,061 | 2,239 | 9 | 3 |
| சீனி | '000மெ.தொ | 70 | 64 | -9 | -5 |
| மீன் | '000மெ.தொ | 229 | 240 | 5 | 8 |

மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி
தொடர்பான அதிகார சபைகள்

## 3.2 வேளாண்மைக் கொள்கை

தற்போதைய வேளாண்மை சார்ந்த உபாயம் என்னவெனில் வேளாண்மை உற்பத்தியாக்கத்தை அதிகரித்து, பண்ணை வருமானத்தினை மேம்படுத்தி, போட்டிச் சூழலில் நுகர்வோருக்கு நியாயமான விலைகளில் உணவின் தொடர்ச்சியான வழங்கலை உறுதிப்படுத்துவதேயாகும். தனியார்துறை உற்பத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் பயிர்செய்கைப் பொருள் போன்ற உள்ளீடுகளுக்கான ஏற்பாடுகளின் முன்னணிப்பங்கினை வகிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட வேளையில் அரசதுறை, கொள்கைக் குறிக்கோள்களை அடைவதனை வசதிப்படுத்தும் விதத்தில் ஆதரவுப் பணிகளை ஆற்ற வேண்டுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

பெருந்தோட்டத்துறையில், 1995 இல் தொடங்கப்பட்ட, அரசுடைமை பிரதேசப் பெருந் தோட்டக் கம்பனிகளைத் தனியார் மயமாக்குவது 1997 இலும் தொடர்ந்தது. இவ்வாண்டில் பங்குப் பரிவர்த்தனையினூடாக "எல்லாம் அல்லது ஒன்றுமில்லை " என்ற அடிப்படையில் உயர்ந்த விலைக் குறிப்பீட்டாளர்களுக்கு 7 கம்பனிகளின்51 சதவீதமான பங்குகள் விற்கப்பட்டதன் மூலம் தனியார் மயமாக்கப்பட்ட பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை 20 இற்கு அதிகரித்ததுடன் அரசுடைமையாகவுள்ள பிரதேசப் பெருந்தோட்டக் கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை 3 இற்குக் குறைவடைந்தது. இவ்வாண்டில் நிலவிய செழிப்பான தேயிலை விலைகளின் காரணமாக இவ்வனைத்து வழங்கல்

களினதும் பங்குகள் பங்கொன்று ரூ.10 என நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த விலைக்கு மேலாக மிகைக் கட்டண விலைகளைப் பெற்றன. வயம்பே பிளான்டேசனால் வாங்கப்பட்ட மல்வத்தை வெலி பிளான்டேசன் பங்கொன்று ரூ.61 கொண்ட மிக உயர்ந்த விலையைப் பெற்றது. இவ்வாண்டில் 51 சதவீதப்பங்குகள் விற்கப்பட்ட ஏனைய பெருந்தோட்டங்களாக மத்துரட்டை(பங்கொன்று ரூ.45.75 இல்). எல்பிட்டிய (பங்கொன்று ரூ.30.25 இல்), தலவாக்கல்லை (பங்கொன்று ரூ.40.00 இல்) மற்றும் புசல்லாவ (பங்கொன்று ரூ.39.00இல்) என்பன விளங்கின. மேலும் மஸ்கெலியா மற்றும் வட்டவளை பிளாண்டேசகளின் பொது வழங்கல்களுக்கானதெனக் கருதப்பட்ட பங்குகளில் 20 சதவீதமான பங்கொன்று ரூ. 15 ஆக பங்குப் பரிவர்த்தனையில் விற்கப்பட்ட வேளையில் பொகவந்தலாவ, கேகாலை, அகலவத்தை, கொறனை, மற்றும் களனிவெளி ஆகிய ஐந்து கம்பனிகளினதும் மிகுதிப் பங்குகளான 19 சதவீதமும் பங்கொன்று ரூ.31.11 இலிருந்து பங்கொன்று ரூ.37.05 வரையான விலை வீச்சில் விற்கப்பட்டன. 1997 இறுதியில் 5 பிரதேச பெருந்தோட்டக் கம்பனிக ளினது பங்குகளில் 90சதவீதமும் 3 பிரதேசப் பெருந்தோட்டக் கம்பனிகளின் பங்குகளில் 71 சதவீதமும் 12 பிரதேசப் பெருந்தோட்டக் கம்பனிகளின் பங்குகளில் 51 சதவீதமும் தனியார் துறைக்கு விற்கப்பட்டன.

1996 இல் மிகக் கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்த நெல் உற்பத்தி 1997 இல் ஓரளவு மாத்திரமே மீட்சியடைந்து தொடர்ந்து இரண்டாவதாண்டிலும் உற்பத்தியில் வீழ்ச்சியினைத் தோற்றுவித்தது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 1997 இல் அரிசியின் விலைகள் மேல் நோக்கிய போக்கினைக் காட்டின. அரிசி விலைகளின் மீது காணப்பட்ட அழுத்தம் பாரிய மழை வீழ்ச்சியின் விளைவாக வழங்கல் தடைப்பட்டதன் காரணமாக 1997 இன் இறுதியில் மேலும் அதிகரித்தது. இதன் விளைவாக 1996இனைப் போன்றே அரசாங்கம் சந்தையில் தலையிட்டதுடன் 1997 நவெம்பர் 20ஆம் நாளிலிருந்து 1997/98 பெரும்போக அறுவடை தொடருவதற்கு சற்று முன்னதாக 1998 சனவரி இறுதிவரையான காலப்பகுதியில் அரிசி மீதான 35 சதவீத இறக்குமதித் தீர்வை தளர்த்தப்பட்டது. 1996 திசெம்பரின் 35 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்ட உருளைக்கிழங்கு, மிளகாய் மற்றும் வெங்காயம் என்பனவற்றின் மீதான இறக்குமதித் தீர்வை 1997 சனவரி 31 வரை தொடர்ந்துமிருந்ததுடன் இப்பண்டங்களின் பெருமளவு இறக்குமதி உட்பாய்ச்சல்களையும் தோற்றுவித்தது.

மிளகாய் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பானது அதிகரித்த பெரும்போக அறுவடையுடன் இணைந்து மிகையான நிரம்பல் நிலைமைக்கும், உள்நாட்டு விலைகள் இலாபமற்ற மிகத் தாழ்ந்த மட்டத்திற்கு குறைவடைவதற்கும் வழிவகுத்தது. கிராமிய வேளாண்மையாளர்களை பாதுகாக்க வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்து கொண்டதனால் மிளகாய் உட்பட சில பயிர்களுக்கு ஆகக் குறைந்த உற்பத்தியாளர் விலைத் திட்டமொன்றினை 1997 ஓகத்தில் நடைமுறைப்படுத்தியது. சந்தை விலைகள் ஆகக்குறைந்த விலை வீச்சிற்குக் கீழே சரியும் வேளையில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் சந்தையில் தலையிட்டது. இத்திட்டம் இரண்டாண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்படுமென 1997 நவெம்பரில் அரசு அறிவித்தது.

அவ்வப்பொழுது திடீரென மேற் கொள்ளப்படும் தீர்வை மாற்றங்கள் வேளாண்மைத் துறையின் நீண்டகால வளர்ச்சிக்கு உகந்ததன்று. இது சந்தையில் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கி அரசின் கொள்கையை எதிர்வுகூற இயலாததாக்கி உற்பத்தியாளர் இறக்குமதியாளர் மற்றும் வர்த்தகர்களுக்கு அச்சமூட்டுகிறது. ஒளிவுமறைவற்றதும் நிலையானதுமான வர்த்தகக் கொள்கைக்கான ஒரு உறுதியான கடப்பாட்டினைக் கொண்டிருப்பதானது. வேளாண்மைத் துறையின் அபிவிருத்திக்கும் அதேபோன்று வர்த்தக ஒழுங்குகளுக்கும் உதவும். வேளாண்மை உற்பத்தியாக்கத்தின் மேம்பாடு வேளாண்மை இலாபகரமாக இருக்க வேண்டியதைத் தேவைப்படுத்துகின்றது. வேளாண்மை உற்பத்தியாளர்கள் பயிர்ச் செய்கைக்கு முன்னர் அல்லது உற்பத்தியைத் தொடருவதற்கு முன்னர் அவர்களது முதலீட்டிற்கான வருவாய் பற்றி அறிந்திருத்தல் அவசியமானதாகும். ஆகவே அவ்வப்போது மேற்கொள்ளப்படும் தீர்வை விலக்கல்கள் போன்ற கொள்கை வழிமுறைகள் இத்துறைக்கு மிகுந்த நன்மையளிப்பதாக இல்லை. வேளாண்மைப் பண்டங்களின் வர்த்தகக் கொள்வனவுகள் மற்றும் விற்பனைகளில் கூ.மொ.விற்பனை நிறுவனம் கொண்டுள்ள ஈடுபாடுகள் படிப்படியாகக் கட்டம் கட்டமாக நீக்கப்பட்டு, இத்துறையின் அபிவிருத்தியில் தனியார்துறையினர் தாக்கம் மிக்க பங்கினையளிக்க அனுமதிக்க வேண்டும்.

யூரியா, அமோனியம் சல்பேட், பொட்டாசிய மியூரியேட், முக்கூட்டுச் சிறப்பு பொசுப்பேட் ஆகிய

நான்கு முக்கிய வகைகளுக்குமாக நடைமுறையிலிருந்த வளமாக்கி உதவிக் கொடுப்பனவுத் திட்டம் 1997 செத்தெம்பர் வரை தொடர்ந்தது. 1997 ஒத்தோபரில் இவ்வுதவிக் கொடுப்பனவு திருத்தப்பட்டதுடன் புதிய திட்டத்தின் கீழ் உதவிக் கொடுப்பனவு யூரியாவிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது. இத் திருத்தத்தின் குறிக்கோள் யாதெனில் உதவிக் கொடுப்பனவினை மிகத் தேவைப்படும் சிறு வேளாண்மையாளர்களுக்கு இலக்கிடுவதேயாகும். இத் திட்டத்தின் கீழ் 50 கி.கி.யூரியாவின் சில்லறை விலை ரூ.350 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இத் திட்டம் பருவகால அடிப்படையில் திருத்தத்திற்குட்படும்.

உள்ளூர்க் கைத்தொழிலைப் பாதுகாக்கும் பொருட்டு, இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் மீது 35 சதவீதமான சாதாரண தீர்வை வீதம் விதிக்கப்பட்டது. எனினும் அதிகரித்துச் செல்லும் பன்னாட்டு விலைகளின் பின்னணியில் உள்நாட்டு விலைகளைக் குறைப்பதற்காக 1996 காலப் பகுதியில் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட 17 சதவீத தீர்வை தளர்த்தல் 1997 ஓகத்தில் 11 இலிருந்து 10 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டதுடன் தற்போதைய தீர்வை 25 சதவீதமாக இருந்தது.

பண்ணைக் கைத்தொழிலின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கின்ற விதத்தில், கூட்டுத் தொழில் முயற்சியினை ஏற்படுத்தும் விதத்தில் அரசு இந்தியாவின் தேசிய பண்ணை அபிவிருத்திச் சபையின் உதவியை நாடியது. இந்திய அரசாங்கம் இதற்குச் சாதகமாக செயலாற்றியதுடன் இந்தியாவின் தேசிய பண்ணை அபிவிருத்திச் சபைக்கும் மில்க் இன்டஸ்ரிஸ் லங்காவிற்குமிடையேயான கூட்டு முயற்சியாக 'கிறியா மில்க் இன்டஸ்றீஸ் கம்பனி' உருவாக்கப்பட்டது. தேவையான பொறிகள் மற்றும் கருவிகளின் வழங்கலுக்காக இந்திய அரசு தொடர்க் கொடுகடன்களையும் வழங்கியது. மேலும், இந்திய அரசு இச் செயற்றிட்டத்திலிருந்து கிடைக்கும் பங்கு வருமானத்தினை பண்ணைக் கைத்தொழிலின் அபிவிருத்திக்காக தனியான நிதியமொன்றினைக் கட்டியெழுப்புவதற்கும் பயன்படுத்த இணங்கியுள்ளது.

## 3.3. ஏற்றுமதிப்பயிர்கள்

### தேயிலை

கடந்த சில ஆண்டுகளாக மேல் நோக்கிய போக்கினைப் பதிவு செய்த தேயிலை உற்பத்தி 1997 இலும் தொடர்ந்து அதே போக்கினைக் காட்டி 277 மில்லியன் கி.கிறாம் கொண்ட புதிய உச்ச உற்பத்தியினை அடைந்தது. இது முன்னைய ஆண்டின் உச்ச உற்பத்தியிலும் பார்க்க 7 சத வீதம் அதிகமாக இருந்தது. தனியார் மயமாக்கப்பட்ட பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் பெருந்தோட்டங்களின் முகாமைத்துவம் மேம்பட்டதன் காரணமாக உயர் நிலப் பகுதிகளின் உற்பத்தி 16 சதவீதத்தினாலும் மத்திய நிலப்பகுதிகளின் உற்பத்தி 19 சதவீதத்தினாலும் உயர்வடைந்தமையானது இவ்வாண்டில் காணப்பட்ட நன்கு பரந்தளவிலான மழை வீழ்ச்சியுடன் இணைந்து அதிகரித்த தேயிலை உற்பத்திக்கு முக்கிய பொறுப்பாக இருந்தது. 1970களில் பெருந் தோட்டத்துறை தேசிய மயமாக்கப்பட்டதன் காரணமாக பின்னடைவினைக் கொண்டிருந்த உயர் மற்றும் மத்திய உயர வகைகளின் உற்பத்தி, முன்னர் அரச கட்டுப்பாட்டினைக் கொண்டிருந்த மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை, மற்றும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பனவற்றின் கட்டுப்பாட்டிலிருந்த பெருந்தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்டதனால் கிடைத்த உயர்ந்தமட்ட வினைத்திறனின் காரணமாக மீண்டும் பெரும் அதிகரிப்பினை ஏற்படுத்தியுள்ளது போல் தோன்றுகின்றது. உயர்ந்த மற்றும் மத்திய நில உயர வகைகள் முறையே 1971 இற்கும் 1981 இற்கும் பின்னர் உயர்ந்த உற்பத்தி மட்டங்களைப் பதிவு செய்தன. மேலும் ஆண்டு முழுவதும் நிலவிய கவர்ச்சிகரமான விலைகளின் விளைவாக, குறிப்பாக, மத்திய உயரப் பகுதிகளிலுள்ள கைவிடப்பட்ட மற்றும் புறக்கணிக்கப்பட்ட எல்லை தேயிலை சிறு உடைமைகளிலும் கூட தேயிலைக் கொழுந்தெடுத்தல் தொடங்கியது. புறக்கணிக்கப்பட்டிருந்த தேயிலை நிலங்களில் வேளாண்மை நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கியமை உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பிற்கு பெருமளவிற்கு உதவியது. எனினும் தொடர்ந்து நான்கு ஆண்டு அதிகரித்த உற்பத்திக்குப் பின்னர் வரட்சியின் காரணமாக தாழ்ந்த உயரப் பகுதிகளின் உற்பத்தி 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

சிறு உடைமையாளர் துறையின் தேயிலை உற்பத்தி தொடர்ந்தும் அதிகரித்ததுடன் முன்னைய ஆண்டினைவிட 1 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. எனினும், மொத்த உற்பத்திக்கு சிறு உடைமையாளர் பங்களிப்பின் பங்கு முன்னைய ஆண்டின் 57 சதவீதத்திலிருந்து 1997 இல் 54 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1996இல் 5 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்த சிறு உடைமையாளர் துறையின் சராசரி விளைச்சல் 1997இல் மேலும் 2 சதவீத மேம்பாட்டினைக் காட்டி எக்டேயரொன்றிற்கு 1972 கி.கிறாமாகக்

## அட்டவணை 3.2

### தேயிலைத் துறை மீதான புள்ளி விபரங்கள்

| விடயம் | அலகு | 1995 | 1996(அ) | 1997(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | மில்.கி.கிறாம்கள் | 246 | 258 | 277 |
| உயர் நிலம் | மில்.கி.கிறாம்கள் | 74 | 72 | 84 |
| மத்திய நிலம் | மில்.கி.கிறாம்கள் | 51 | 48 | 57 |
| தாழ் நிலம் | மில்.கி.கிறாம்கள். | 122 | 138 | 136 |
| 2. விளைச்சல்(இ) | | | | |
| மொத்த விளைச்சல் | '000 எக்டேயர்கள் | 189 | 189 | 194 |
| நாட்டப்பட்ட நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 173 | 174 | 182 |
| 3. வளமாக்கிப் பாவனை | '000 மெ.தொன்கள் | 120 | 154 | 160 |
| 4. மீள்நடுகை | எக்டேயர்கள் | 1,215 | 937 | 926 |
| 5. புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 1,397 | 479 | 340 |
| 6. விலைகள் | | | | |
| கொழும்பு(தேறிய) | ரூபா/கி.கி. | 72.21 | 103.88 | 119.40 |
| ஏற்றுமதி(க.ஏ.பெ) | ரூபா/கி.கி. | 102..31 | 139.56 | 158.39 |
| 7. உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி. | 76.14 | 87.04 | 90.26 |
| 8. ஏற்றுமதிகள் | ரூ.மில்.கி.கி. | 241 | 244 | 268.5 |
| 9. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ.மில் | 24,638 | 34,068 | 42,533 |
| | அ.டொ.மில் | 480.7 | 615.4 | 719.1 |
| 10. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஈ) | | 2.1 | 2.2 | 2.4 |


மூலங்கள் : இலங்கைத் தேயிலைச் சபை
தேசிய வளமாக்கிச் செயலகம்
இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) தேயிலை ஆணையாளர் பிரிவினால் 1994/95 இல் மேற்கொள்ளப்பட்ட அளவையின் அடிப்படையில் அமைந்தவை. (கைவிடப்பட்ட தேயிலை நிலங்கள் உள்ளடங்காது.)
(ஈ) பயிரிடலும் பதனிடலும் மட்டும்.

**வரைபடம் 3.1**

**விலை உற்பத்திச் செலவுச் சுட்டெண்கள் - தேயிலை**

**(1990 = 100)**




காணப்பட்டது. அதேவேளை குறிப்பிடத்தக்க மேம்பாட்டினைக் காட்டிய பெருந்தோட்டத் துறையின் சராசரி விளைச்சலும் தேசிய உற்பத்தி எக்டேயரொன்றிற்கு 1465 கி.கிறாமிற்கு உயர்வடைய 7 சதவீத பங்களிப்பினை வழங்கியது. எனினும் சிறு உடைமயாளர்களுடன் ஒப்பிடுகையில் பெருந் தோட்டத்துறையின் சராசரி விளைச்சல் இன்னமும் திருப்திகரமான அளவிற்கு மிகக் குறைவாகவே இருக்கிறது. சிறு உடைமையாளர்களினால் பதிவு செய்யப்பட்ட விளைச்சல் பெருந்தோட்ட விளைச்சல் களைவிட ஒன்றரை மடங்கு அதிகமானதாகும். பெருந்தோட்டத் துறையின் மோசமான விளைச்சலுக்கான முக்கிய காரணம் உயர்ந்த விளைச்சலைக் கொண்ட புதிய முறையிலான இனப் பெருக்கத் தேயிலை யுடன்ஒப்பிடுகையில் பெருந் தொகையான நிலப் பரப்பு இன்னமும் குறைந்த விளைச்சலைக் கொண்ட நாற்றுநடல் முறையின் கீழ் காணப்படுவதேயாகும். எனவே, பெருந்தோட்டக் கம்பனிகள் போட்டித் தன்மையுடனும் பன்னாட்டு விலைகள் குறைவடைந்து செல்கையிலும் கூட ஆற்றலுடன் விளங்குவதற்கும் புதிய முறையிலான இனப் பெருக்கத் தேயிலைக் கன்றுகளைப் பயன்படுத்தி மீளப்பயிரிடல் மற்றும் இடைப்பயிரிடல்களை மேற்கொள்ள வேண்டும்.

1996 இல் தற்காலிக பின்னடைவினைக் கொண்டிருந்த வெட்டி, கிழித்து, சுருட்டப்பட்ட தேயிலை உற்பத்தி இவ்வாண்டில் மீட்சியடைந்து 19 மில்லியன் கி.கிறாம்களுக்கு உயர்ந்து 15 சதவீத வளர்ச்சியினைப் பதிவு செய்தது.

அரசிற்குச் சொந்தமான பெருந் தோட்டங்களினதும் 21 பெருந்தோட்டக் கம்பனிகளினதும் தயாரிக்கப்பட்ட தேயிலையின் நிறையேற்றப்பட்ட சராசரி உற்பத்திச் செலவு கி.கிறாமிற்கு ரூ.90.26இற்கு 4 சதவீதத்தினால் அதிகரித்தது. முன்னைய ஆண்டினைப் போன்றே தொழிலாளர் செலவு (பேணல் மற்றும் பயிரிடல்) மிகப் பெரும் பங்கிற்கு வகைகூறி உற்பத்திச் செலவில் ஏறத்தாள 40 சதவீதத்திற்கு வகைகூறியது. வாங்கப்பட்ட தேயிலைக் கொழுந்திற்கான கொடுப்பனவு மாதாந்த விற்பனைச் சராசரியினை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டது. எனவே தேயிலைக் கொழுந்திற்கான அதிகரித்த கொடுப்பனவும் உற்பத்திச் செலவினை அதிகரித்தது.

1995இன் பிற்பகுதியில் தொடங்கிய தேயிலை விலைகளின் மேல் நோக்கிய போக்கு 1997 ஆம் ஆண்டு முழுவதிலும் தொடர்ந்து காணப்பட்டது.

செழிப்பான தேயிலை விலைகளுக்கு, முக்கிய போட்டி நாடுகளான இந்தியா மற்றும் கென்யாவின் குறைந்த வழங்கலே காரணமாகும். இந்தியத் தேயிலையின் ஏற்றுமதி செய்யத்தக்க மிகை தொடர்ந்தும் வரையறுக்கப்பட்டிருந்தமைக்கு அதிகரித்துச் செல்லும் உள்நாட்டுக் கேள்வியே காரணமாகும். அதேவேளை, இவ்வாண்டில் ஏற்பட்ட கடுமையான வரட்சியினால் கென்யாவின் தேயிலை உற்பத்தி பின்னடைவைக் கொண்டிருந்தது. இதன் விளைவாக உலகின் முதன்மைத் தேயிலை ஏற்றுமதியாளர் என்ற அதன் நிலையை இலங்கை மீண்டும் பெற்றுக் கொண்டதுடன் கென்யா இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டது. முன்னைய ஆண்டில் 44 சதவீதங்கொண்ட வியக்கத்தகு வளர்ச்சியைக் கொண்டிருந்த, கொழும்பு ஏலத்தில் பெறப்பட்ட ஆண்டுத் தேறிய விற்பனைச் சராசரி விலை கி. கிறாமொன்றிற்கு ரூ. 119.40 இனை அடைந்து மேலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவு செய்ததுடன் ரூபா நியதிகளில் கொழும்பு ஏலத்தில் பெறப்பட்ட மிகச் சிறந்த விலையைப் பதிவு செய்ததுடன் முன்னைய ஆண்டின் உச்ச விலையை மேலும் 15 சதவீதத்தினால் விஞ்சியது. முன்னைய ஆண்டில் 36 சதவீதத்தினால் மேம்பாடடைந்த ஆண்டுச் சராசரி ஏற்றுமதி விலை கி.கிறாமிற்கு ரூ.158.39 இற்கு உயர்ந்து மேலும் 13 சதவீதங்கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

இவ்வாண்டுக் காலத்தில் ஏற்றுமதியின் அளவு 268 மில்லியன் கிலோக் கிறாமிற்கு 10 சதவீதத்தினால் அதிகரித்தது. அதிகரித்த ஏற்றுமதி அளவு உயர்வடைந்த விலைகளுடன் இணைந்து ஏற்றுமதி வருவாய்கள் 25 சதவீத மேம்பாடு அடைய உதவியதுடன் இவ்வருவாய்கள் ரூ. 42,500 மில்லியனை அடைந்தன. இதன் விளைவாக தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 1997 இன் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 16 சதவீதத்திற்கு வகைகூறின. முன்னைய ஆண்டினைப் போன்றே, சுதந்திர அரசுகளின் பொதுநலவாய நாடுகள் இலங்கைத் தேயிலையின் முன்னணி வாங்குனராகத் தொடர்ந்தும் இருந்ததுடன் ஏற்றுமதிகளில் 20 சதவீதத்திற்கும் வகைகூறியது. இலங்கைத் தேயிலை யின் இரண்டாவது பெரும் இறக்குமதியாளரான துருக்கியின் இசுத்தான்புல் நகரில் இலங்கைத் தேயிலைச் சபை 1997 செத்தெம்பரில் தேயிலை மேம்பாட்டுப் பணியகம் ஒன்றைத் திறந்தது.

பைகளில் அடைக்கப்பட்ட தேயிலை ஏற்றுமதி மேம்பாட்டினைப் பதிவு செய்ததுடன் மொத்த ஏற்றுமதிகளில் 4 சதவீதத்திற்கு வகை கூறியது. எனினும் தொகை வடிவிலான கருந்தேயிலை பாரிய வகையாக விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் 55 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்கிற்கு வகை கூறியது. பைகளிலடைக்கப்பட்ட பெறுமதி கூட்டப் பட்ட தேயிலையின் சராசரி விலை தொகை வடிவிலான தேயிலைக்கு அடையப்பட்ட சராசரி விலையிலும் பார்க்க ஏறத்தாள இரண்டரை மடங்கு அதிகமானதாகும். இது தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பது மட்டுமன்றி பன்னாட்டுத் தேயிலை விலைகளின் தளம்பல் காரணமாக ஏற்படும் இழப்புக்களையும் மிகக் குறைக்கும்.

விலைகளில் காணப்பட்ட மேம்பாட்டுடன் அதிகரித்துக் காணப்பட்ட தேயிலத் துறையின் வளமாக்கிப் பாவனை 1997 இல் மேலும் 4 சதவீதத்தினால் தொடர்ந்தும் அதிகரித்தது. தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்தி மேலாண்மைச்சபையினால் நடைமுறைப் படுத்தப்பட்ட வளமாக்கிக் கடன் திட்டத்ினூடாக பகிர்ந்தளிக்கப்பட்ட வளமாக்கி முன்னைய ஆண்டு டன் ஒப்பிடுகையில் 60 சதவீதத்தினால் அதிகரித்தது. தொடர்ந்து மூன்றாண்டுகளாகப் புதிய பயிரிடலுக் கான உதவி எக்டேயரொன்றிற்கு ரூ. 36,000 ஆக அதே மட்டத்தில் காணப்படுவதுடன் இது உண்மை யான புதிய பயிரிடல் செலவுகளில் ஒரு பகுதியை ஈடு செய்ய மட்டுமே (ஏறத்தாள 11 சதவீதம்) போதுமானதாக இருந்தது. இவ்வாண்டில் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1996இல் புதிதாகப் பயிரிடப்பட்ட 479 எக்டேயர்களுடன் ஒப்பிடுகைளில் 340 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் சிறு உடைமையாளர்களுக்கு பகிர்ந்த ளிக்கப்பட்ட தொகை 1996 இல் பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ.16 மில்லியனுடன் ஒப்பிடுகைளில் ரூ.8 மில்லியனாக விளங்கின. மீள் நடுகைக்கான உதவியும் முன்னைய ஆண்டின் அதே மட்டத்தில் அதாவது மத்திய மற்றும் உயர் நிலங்களுக்கான உதவி ரூ. 67,000 ஆக இருந்தவேளையில் தாழ் நிலங்களுக்கான வீதம் எக்டேயருக்கு ரூ.57,000 ஆகக் காணப்பட்டது. சிறு உடைமையாளர் களினால் மீள் நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பும் கூட 435 எக்டேயர்களுக்கு குறைவடைந்ததுடன் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ரூ.30 மில்லியனாகக் காணப்பட்டது. உயர்ந்த விலைகள் நிலவும் வேலை களில் மரங்களைப் பிடுங்குவதன் காரணமாக இழக்கப்படும் வருமானம் கணிசமாக இருப்பதன் விளைவாக மீள் நடுகை நடவடிக்கைகள் உயர்ந்த

விலைகளினாலேயே பாதிக்கப்பட்டிருக்கக்கூடும். தேயிலை சிறு உடைமையாளர்களுக்கு மீள் நடுகை மற்றும் புதிய நடுகைக்கு வழங்கப்பட்ட உதவிகளுக்குப் புறம்பாக, தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்தி மேலாண்மைச் சபை சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டத்தினையும் மேற்கொண்டதுடன் இதன் கீழ் ஏறத்தாள 300 மில்லியன் மீள் நடுகை, புதுநடுகை மற்றும் நாற்றுமேடை அபிவிருத்தி என்பனவற்றிற்கான கடனாக வழங்கப்பட்டன. இவ்வாண்டில் தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்தி மேலாண்மைச்சபை, சிறு உடைமையாளர்களுக்காக "தேயிலைச் சக்தி" எனக் குறிப்பிடப்படும் சிறப்பு சேமிப்பு முதலீட்டு காப்புறுதி ஒன்றினையும் நடைமுறைப்படுத்தியது. 1997 இறுதியில் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 55,648 பேராகக் காணப்பட்டது.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் குறிப்பாக, மேற்கு அரைக் கோளத்தில் தேயிலை சுகாதாரக் குடிபானமாகப் பிரபல்யம் பெற்று வருகின்றது. எனினும் தற்போது நிலவுகின்ற செழிப்பான தேயிலை விலைகளின் காரணமாக இத்தொழிலில் அளவுக்கு மீறிய நம்பிக்கையை வைக்கக் கூடாது. ஏனெனில் கென்யாவின் உற்பத்தி மீட்சியடைந்தால் பன்னாட்டு விலைகளில் மந்தத்தை ஏற்படுத்தக் கூடும். ஆகவே பன்னாட்டுச் சந்தையில் தாக்குப் பிடிக்கக் கூடியதாகவும் போட்டித் தன்மையுடனும் இருப்பதற்கு உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்துவது இன்றியமையாததாகும். இது தொடர்பாக, முறையான மீள்நடுகை நிகழ்ச்சித் திட்டத்திற்கு உயர்ந்த முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

தொழிற்சாலை அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ், இவ்வாண்டில் 93 தொழிற்சாலைகளுக்கு மொத்தமாக ரூ.44 மில்லியன் கொண்ட தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. அதிகரித்த விலை பெறப்பட்டமையைக் கருத்திற்கொண்டு தீர்வையானது 1997 ஏப்பிறல் 2ஆம் நாளிலிருந்து 50 சதத்தினால் கி.கிறாமொன்றுக்கு ரூ.2.50 இற்கு அதிகரிக்கப்பட்டது. இவ்வாண்டில் சேகரிக்கப்பட்ட தீர்வையின் மொத்தத் தொகை ரூ.538 மில்லியனாக அமைந்ததுடன் இது முன்னைய ஆண்டின் சேகரிப்பினைவிட 9 சதவீதம் உயர்வானதாக இருந்தது.

## இறப்பர்

1997 இல் இறப்பர் உற்பத்தி 106 மில்லியன் கிலோக் கிறாம்களாக விளங்கி 1996 இல் பதிவு செய்யப்பட்ட உற்பத்தியைக் காட்டிலும் 6 சதவீதம் குறைவானதாகக் காணப்பட்டது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முழு ஆண்டுப் பகுதியிலும் நிலவிய கவர்ச்சியற்ற விலைகளின் விளைவாக குறைந்தளவான வளமாக்கி பிரயோகிக்கப்பட்டமை மற்றும் நலிவுற்ற முகாமைச் செயல் முறைகள் என்பன காரணமாயமைந்தன. இத்துடன் ஆண்டின் பிற்பகுதியில் அதிக நாட்கள் மழை பெய்தமை இறப்பர் பாலெடுத்தலை ஓரளவிற்கு தடைப் படுத்தியது.

இலங்கையானது இயற்கை இறப்பரை உற்பத்தி செய்யும் முக்கிய உற்பத்தியாளரோ

**அட்டவணை 3.3**
**இறப்பர்த்துறை மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 1995 | 1996(அ) | 1997(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | மில்.கி.கிறாம்கள் | 106 | 113 | 106 |
| 2. பரப்பளவு (இ) | | | | |
| பயிர்ச்செய்கைக் உட்பட்ட | '000 எக்டேயர்கள் | 162 | 162 | 163 |
| பால் எடுக்கும் | '000 எக்டேயர்கள் | 124 | 122 | 129 |
| 3. விளைச்சல் | கி.கி/எக்டேயர்கள் | 853 | 927 | 823 |
| 4. வளமாக்கிப் பயன்பாடு | 000 மெ.தொன்கள் | 15 | 17 | 12 |
| 5. மீள்நடுகை (ஈ) | எக்டேயர்கள் | 3,239 | 3,443 | 1,033 |
| 6. புதிய பயிரிடுகை(ஈ) | எக்டேயர்கள் | 829 | 1,297 | 751 |
| 7. விலைகள் | | | | |
| ஏற்றுமதிகள்(க.ஏ.பெ) | ரூபா/கி.கி. | 83.69 | 79.78 | 75.42 |
| கொழும்பு (ஆர்.எஸ்.எஸ் 1) | ரூபா/கி.கி. | 72.04 | 67.85 | 56.62 |
| 8. உற்பத்திச் செலவு(ஈ) | ரூபா/கி.கி. | 33.37 | 36.70 | 40.37 |
| 9. ஏற்றுமதிகள் | மில்.கி.கிறாம்கள் | 68 | 72 | 62 |
| 10. உள்நாட்டு நுகர்வு | மில்.கி.கிறாம்கள | 37 | 40 | 44 |
| 11. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ.மில் | 5,713 | 5,753 | 4640 |
| | அ.டொ.மில் | 111 | 104 | 79 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி | | 0.8 | 0.9 | 0.7 |

மூலங்கள் : இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்
தேசிய வளமாக்கிச் செயலகம்
இலங்கை மத்திய வங்கி


(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) 1993 இல் குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மைப் பயிர்கள் மற்றும் விலங்கு வளர்ப்பு மீதான அளவையின் அடிப்படையில் அமைந்தது.
(ஈ) இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தின் கீழான நிலப்பரப்பு.
(உ) பயிரிடலும் பதனிடலும் மட்டும்.

அன்றேல் முக்கிய ஏற்றுமதியாளரோ அல்ல. எனினும் அது உலக சந்தையில் மிகை விலையொன்றுடன் விற்பனை செய்யப்படும் லேட்டெக்ஸ் கிறேப் இறப்பரின் முக்கியவொரு வழங்குனராக விளங்குகின்றது. 1996 இன் உலக இயற்கை இறப்பர் உற்பத்தி ஏற்றுமதி புள்ளி விபரத்தின்படி, இலங்கை முறையே ஏழாம், ஐந்தாம் இடங்களை வகிக்கின்றது. அதன் உற்பத்தியினதும் ஏற்றுமதியினதும் பங்குகள் உலக உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகளின் 2 சதவீதத்திற்கும் குறைவானதாகும். பன்னாட்டுச் சந்தையில் இயற்கை இறப்பரின் விலைகள் வீழ்ச்சியடைந்தமைக்கு பல காரணிகள் பொறுப்பாயமைந்தன. தாய்லாந்தினதும் சீனாவினதும் இயற்கை இறப்பரின் பாரிய திரண்ட இருப்புக்களானது அவற்றின் தந்திரோபாய முக்கியத்துவத்தினை நலிவுறச் செய்தமையானது 1997 பெப்புருவரியிலும், மேயிலும் ஐக்கிய அமெரிக்கா அதன் இயற்கை இறப்பர் இருப்புக்களை சந்தைக்கு விடுவதற்கு நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கியது. இயற்கை இறப்பர் உற்பத்தியாளர்களையும் நுகர்வோரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பன்னாட்டு இயற்கை இறப்பர் அமைப்பானது இறப்பர் விலைகளை நிலைப்படுத்துவதற்காக சந்தையில் தலையீடு செய்கின்றது. எனினும் மலேசியா/ சிங்கப்பூர் சதங்களினால் அளவிடப்படும் நாளாந்த சந்தை குறிகாட்டிவிலை அடிமட்டத்திற்குக் கீழ் செல்லாததினால் அத்தகைய தலையீடு இடம்பெறவில்லை. குறிப்பாக தாய்லாந்து, இந்தோனேசியா என்பனவற்றின் உள்ளூர் நாணயங்களின் நியதிகளின்படி, இயற்கை இறப்பரின் விலைகள் அதிகரித்த போதிலும் ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில் விலைகள் முனைப்பாக வீழ்ச்சியடைந்தன. இது அந் நாடுகளிலிருந்து பெருந் தொகையான இயற்கை இறப்பரைக் குறிப்பாக லேட்டெக்சினை உள்ளூர் தயாரிப்பாளர்கள் இறக்குமதி செய்யும் நிர்ப்பந்தத்தினை ஏற்படுத்தியது. இதன் விளைவாக உள்ளூர் விலைகள் பன்னாட்டு விலைகளுடன் தளம்பலுற்றன. 1997 இல் பன்னாட்டு சந்தைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் விலைப் போக்கு உள்ளூர் சந்தையிலும் பிரதிபலித்தது. 1996 இன் விலைகளுடன் ஒப்பிடுகையில் ஆர்.எஸ்.எஸ் இறப்பரின் கொழும்பு ஏலவிலை மிகவும் தாழ்ந்த மட்டத்தையடைந்து ஆர்.எஸ்.எஸ் உற்பத்தியாளருக்கான விலை ஊக்குவிப்பினை மோசமாக்கியது. ஆர்.எஸ்.எஸ் 1 இன்ஆண்டுச் சராசரி விலை கொழும்பு ஏலத்தில் 17 சதவீதத்தினால் ரூபா 56.62 இற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் ஏனைய ஆர்.எஸ்.எஸ் இறப்பரின் விலைகள் 25 – 30 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 1996 உடன் ஒப்பிடுகையில் அனைத்துத் தரங்களினதும் சராசரி ஏற்றுமதி விலை மேலும் 5 சதவீதத்தினால் ரூபா 75.42 இற்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கிடையே இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்ட இறப்பரின சராசரி உற்பத்திச் செலவு (பாரிய பெருந்தோட்டங்களினதும் சிறு உடைமையாளர் துறையினதும்) 10 சதவீதத்தினால் கிலோக் கிறாமொன்றுக்கு ரூபா 40.37 இற்கு அதிகரித்துள்ளது. அதிகரித்த உற்பத்திச் செலவும் வீழ்ச்சியடைந்த சந்தை விலைகளும் சிறு உடமையாளர்களின் இலாப மிகையை குறைவடையச் செய்து ஆர்.எஸ். எஸ் இறப்பர் தயாரிப்பாளர்களை பொருளாதார ரீதியில் வளமற்றதாக்கியுள்ளது. மேற்கூறப்பட்ட நிகழ்வுகளிலிருந்து இறப்பர் துறையினால் எதிர்நோக்கப்படும் பிரச்சனைக்கு கிழக்காசிய நாணய நெருக்கடி, ஏனைய புறக்காரணிகளின் தாக்கங்கள் என்பன மட்டுமன்றி இத்துறையின் உற்பத்திச் செலவு கீழ்நோக்கி செல்லாமையும் குறைந்த வினைத்திறனும் கூட காரணமாயமைந்துள்ளமை தெளிவாகின்றது.

**வரைபடம் 3.2**

**விலை, உற்பத்திச் செலவுச் சுட்டெண்கள் – இறப்பர்**

**(1990 = 100)**




இந் நிகழ்வுகளையடுத்து உள்ளூர் இறப்பர் உற்பத்தியாளர்கள் குறிப்பாக லேட்டெக்ஸ் மற்றும் தட்டை இறப்பர் உற்பத்தியாளர்கள் இத் துறையில் மோசமான செயலாற்றத்தினை வெளிக்காட்டினார்கள். தட்டை இறப்பர் (ஆர்.எஸ்.எஸ்) மற்றும் கிறேப் இறப்பர் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1997 இல் முறையே 46.1 மில்லியன் கிலோக் கிறாமிற்கும் 40.9 மில்லியன் கிலோக் கிறாமிற்கும் 13 சதவீதத்தினாலும் 1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தது. மொத்த இறப்பர் உற்பத்தியில் தட்டை இறப்பரின் பங்கு 1996 இன் 47 சதவீதத்திலிருந்து 1997 இல் 44 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தபோதிலும் கிறேப் இறப்பரின் பங்கு இக்காலப்பகுதியில் 37 சதவீதத்திலிருந்து 39சதவீதத்திற்கு அதிகரித்தது. அத்துடன் லேட்டெக்ஸ்

கிறேப் போன்ற குறிப்பிட்ட சில தரத்திலான இறப்பர் 1997 இல் சார்பளவில் நல்ல விலைகளைப் பெற்றுக்கொண்டன. எனினும் அத்தகைய உயர் தரங்கொண்ட இறப்பர் தயாரிப்பில் பயன்படுத்தப் படும் தொழினுட்பத்தை விளங்கிக் கொள்ளவோ செலவுகளை மேற் கொள்ளவோ சிறு உடைமையாளர்கள் இயலாது காணப்படுகின்றனர். மேலும் அதுவொரு தனிச்சந்தை என்பதுடன் மிகை உற்பத்தியானது தற்போதைய உயர் விலைகளை பாதிப்புறவும் செய்யலாம். ஆர்.எஸ்.எஸ் தரங்களுக்கு மிடையிலான விலை வேறுபாடுகள் குறிப்பிடத் தக்களவு உயர்வானதாகும். எனவே ஏற்கனவேயுள்ள உற்பத்தி செயல் முறையை நல்ல தரமான தட்டை இறப்பரைத் தயாரிப்பதற்கேதுவாக அபிவிருத்தி செய்வதும் சிறுவுடைமையாளர்கள் நியாயமான சிறந்த விலையைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இறப்பரை லேட்டெக்ஸ் வடிவில் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருள் உற்பத்தியில் பிரத்தியேகமாக ஈடுபட்டு ள்ளவர்களுக்கு விற்பனை செய்வதுமே உடனடி முன்னுரிமையாகத் திகழ வேண்டும். இந் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்ப தற்காக தேயிலை சிறுவுடைமை அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் தற்பொழுது தேயிலை சிறு உடைமையாளர்களுக்கு வழங்கப்படும் பணிகளை ஒத்த வசதிகளை இறப்பர்த்துறையின் சிறுவுடைமையாளர்களுக்கு வழங்கும் வகையில் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினை மறுசீரமைப்பது பயனுள்ளதாக அமையும்.

இந் நிகழ்வுகளுக்கு மத்தியிலும் இறப்பரின் கீழான பரப்பளவு 162,820 எக்டேயர்களுக்கு சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டியவேளையில் பால்எடுத்தலின் கீழான பரப்பளவும் 5 சதவீதத்தி னால் 128,609 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. உலக வங்கியினால் நிதியளிக்கப்படும் சிறுவுடை மையாளர் இறப்பர் புனருத்தாபன நிகழ்ச்சித் திட்டத்தின் (சி.இபு.நி 11) இரண்டாம் கட்டம் 1997 யூனில் முடிவுக்கு வந்தது. வீழ்ச்சியடைந்த விலைகள் மற்றும் நிதியின்மை என்பன காரணமாக புதிதாக நடப்பட்ட மற்றும் மீள் நடப்பட்ட பரப்பளவுகள் முறையே 42 சதவீதத்தினாலும், 70 சதவீதத்தி னாலும் 751 எக்டேயர்களுக்கும் 1033 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தன. சிறுவுடமை இறப்பர் புனருத்தாரண நிகழ்ச்சித் திட்டம் 11 முடிவுறுத்தப் பட்ட மையானது பயிர் புனருத்தாபன நிகழ்ச்சித் திட்டங்களின் மீது குறிப்பாக புதிதாக நடல் மீள்நடல் என்பனவற்றில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடுமாகையால் புதிதாக நடல் மற்றும் மீள்நடல் நிகழ்ச்சித் திட்டங்களினால் வெளிப்படுத்தப்பட்ட மோசமான செயலாற்றமானது விசேட அக்கறையை வேண்டி நின்றது.

இலங்கை தன்னகத்தே கொண்டுள்ள முக்கிய உள்ளூர் கைத்தொழில் மூலப் பொருட்களில் ஒன்றாக இறப்பர் விளங்குகின்றது. (ஏனெனில் நியாயமான விலையில் அது கிடைக்கக் கூடியதாக வுள்ளது) இறப்பரை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புக் கைத்தொழிலின் வாய்ப்பு மிகவும் பிரகாசமாக அமைந்துள்ளது. இப் போக்கிற்கிணை ந்ததாக உள்ளூர் இறப்பரின் நுகர்வு தொடர்ந்து அதிகரித்தது. 1997 இல் உள்ளூர் நுகர்வு 10 சதவீதத்தினால் 44 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு உயர்வடைந்தது.

1997 இல் சேகரிக்கப்பட்ட மொத்த இறப்பர் தீர்வை ரூபா 334 மில்லியனாக விளங்கியது. இத் தீர்வையின் பெரும்பகுதி இறப்பர் பயிர் அபிவிருத்தி மற்றும் புனருத்தாபன நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டது. இறப்பர் அபிவிருத்தி புனருத்தாபன நிகழ்ச்சித் திட்டங்களுக்கென எதுவித வெளிநாட்டு உதவியும் இல்லாத நிலையில் தீர்வை நிதிகளின் பொருத்தமான ஒதுக்கீடும் பயன்பாடும் எதிர்காலத்தில் இத்துறைக்கு மிக முக்கியமானதாக விளங்குகின்றன.

## தெங்கு

1997இல் தெங்கு உற்பத்தி 3 சதவீதத்தினால் 2,631 மில்லியன் காய்களுக்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப் பட்டது. இதன்படி உலர்த்திய தேங்காய் துருவல் போன்ற முக்கிய உள்ளீட்டுப் பொருட்களான உற்பத்திக்கான காய்களின் சமமான அளவு 23 சதவீதத்தினால் 524 மில்லியன் காய்களுக்கு அதிகரித்த வேளையில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 289 மில்லியன் காய்களாக அமைந்தது. உலர்த்திய தேங்காய் ஏற்றுமதிகளின் காய்களுக்குச் சமமான அளவும் 8 சதவீதத்தினால் 42 மில்லியனுக்கு அதிகரித்த வேளையில் உடன் காய்களின் ஏற்றுமதியும் 6 சதவீத அதிகரிப்பை பதிவு செய்தது. எனினும் உலர்த்திய தேங்காய்த் துருவல் ஆலைகளிலிருந்தான தேங்காய்களுக்கான பெருமளவு கேள்வியின் விளைவாக உடன்காய் ஏற்றுமதிகளும் தேங்காய்க்களி மற்றும் பால் மா உற்பத்திக்குச் சமமான காய்களின் அளவும் முறையே 6 சதவீதத்தினாலும் 14 சதவீதத்தினாலும் வீழ்ச்சியுற்றன.

ஆண்டின் முதல் சில மாதங்களில் வழங்கல் நிலைமை இறுக்கமடைந்து காணப்பட்டபோதிலும்

## அட்டவணை 3.4

### தெங்குத்துறை மீதான புள்ளி விபரங்கள்

| விடயம் | அலகு | 1995 | 1996(அ) | 1997(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (இ) | மில்.காய்கள் | 2,755 | 2,546 | 2,631 |
| தேங்காய்த்துருவல் | மில்.காய்கள்(ஈ) | 465 | 425 | 524 |
| தேங்காய் எண்ணெய் | மில்.காய்கள்(ஈ) | 516 | 328 | 289 |
| உலர்த்திய தேங்காய்(உ) | மில்.காய்கள்(ஈ) | 50 | 39 | 42 |
| உடன்காய் ஏற்றுமதிகள் | மில்.காய்கள் | 27 | 17 | 18 |
| உள்நாட்டு தேங்காய் நுகர்வு;(ஊ) | மில்.காய்கள் | 1,716 | 1,720 | 1,744 |
| 2. மொத்த நிலப்பரப்பு; | 000 எக்டேயர்கள் | 416 | 417 | 417 |
| 3. மீள்பயிரிடல்/கீழ்ப் பயிரிடல் (எ) | எக்டேயர்கள் | 986 | 578 | 1,221 |
| 4. புதிய பயிரிடல்(எ) | எக்டேயர்கள் | 1,250 | 841 | 931 |
| 5. வளமாக்கிப்பாவனை | 000 மெ.தொ | 34 | 39 | 35 |
| 6. உற்பத்திச்செலவு; | காய்க்கு ரூபா | 2..02 | 2.18 | 2.26 |
| 7. சராசரி ஏற்றுமதி விலை (க.ஏ.பெ) | காய்க்கு ரூபா | 6.08 | 9.42 | 9.63 |
| 8. ஏற்றுமதி வருவாய் | ரூ.மில். | 5,271 | 6,091 | 6,939 |
| | ஐ.டொ.மில். | 103 | 110 | 118 |
| உள்ளீட்டு உற்பத்திகள் (ஏ) | ரூ.மில். | 3,521 | 4,469 | 4,864 |
| | ஐ.டொ.மில். | 69 | 81 | 82 |
| ஏனையஉற்பத்திகள் | ரூ.மில். | 1,750 | 1,622 | 2,075 |
| | ஐ.டொ.மில். | 34 | 29 | 35 |
| 9. மொ. உ. உ.இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (ஐ) | | 2.1 | 2.1 | 2.3 |

மூலங்கள் : தெங்குப் பயிர்ச்செய்கைச்சபை
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை
தேசிய வளமாக்கிச் செயலகம்
இலங்கை மத்திய வங்கி


(அ திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காயின் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சீராக்கஞ் செய்யப்படுவதன் காரணமாக பகுப்பாய்வின் கூட்டுத்தொகை மொத்தத்துடன் ஒத்திருக்க மாட்டாது.)
(ஈ) தேங்காய்க்குச் சமனான
1 மெற். தொன் தேங்காய்துருவல் = 6,800 காய்கள்
1 மெ. தொ எண்ணெய் = 8,000 காய்கள்
1 மெ. தொன் உலர்த்திய தேங்காய் = 4,925 காய்கள்
(உ) ஏற்றுமதிகள் மட்டும்.
(ஊ) தலைக்குரிய வீட்டு நுகர்வு; ஆண்டுக்கு 94.8 காய்கள் என மதிப்பிடப்பட்டது கைத்தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டவை தவிர.
(எ) தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஏ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஐ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

ஆண்டின் இரண்டாம் மூன்றாம் காலாண்டுகளில் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பானது வழங்கலில் காணப்பட்ட பற்றாக்குறையை அகற்றியது. தெங்கு உற்பத்தியில் கிட்டத்தட்ட 66 சதவீதமானவை உள்ளூரில் நுகரப்படுகின்றது. எஞ்சியவற்றிற்காக உலர்த்திய தேங்காய்த்துருவல் ஆலைகள், எண்ணெய் ஆலைகள் மற்றும் ஏனைய உள்ளீட்டுப் பதனிடல் கைத்தொழில்கள் போன்றவற்றுடன் உலர்த்திய தேங்காய் ஏற்றுமதியாளர்களும் போட்டியிடுகின்றனர். உற்பத்தி மேம்பாடடைந்ததால் உலர்த்திய தேங்காய் இறக்குமதிகள் 51 சதவீதத்தினால் 395,600 கிலோக் கிறாம்களுக்கு வீழ்ச்சியு;ற்றன. பன்னாட்டுச் சந்தையில் தாவர எண்ணெயின் விலைகள் வீழ்ச்சியடைந்தமை இறக்குமதித் தீர்வை மற்றும் ட;ரள்வ; வரி சலுகைகள் என்பன காரணமாக 1996 இல் இறக்குமதி செய்யப்பட்ட 21.9 மில்லியன் கிலோக் கிறாம்களுக்கு எதிராக இவ்வாண்டில் முன்னெப் போதுமில்லாத வகையில் 37.7 மில்லியன் அளவு; கொண்ட தாவர எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது. எனினும் தாவர உள்ளீட்டு எண்ணெய் இறக்குமதிகள் 1996 இன் 17 மில்லியன் கிலோக்கிறாம்களிலிருந்து 1997 இல் 9 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியு;ற்றன. தேங்காயெண்ணெய் தவிர்ந்த உணவு;க்காகப் பயன்படுத்தப்படும் எண்ணெய்கள் 1997 சனவரி 15 வரையிலும் 30 சதவீத இறக்குமதித் தீர்வை தளர்த்தலை கொண்டிருந்ததுடன் அதன் பின்னர் அது 20 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. பொதுவான தீர்வை வீதம் 35 சதவீதமாகக் காணப்பட்டது. உணவு;க்காகப் பயன்படுத்தப்படும் எண்ணெய்கள் மீதான ட;ரள்வ;வரி 7 சதவீதமாக விளங்கிய வேளையில் (1997 நவம்பரில் 8 சதவீதத்திற்கு அதிகரித்தது) பெரும்பாலான தேங்காய் உற்பத்திகள் மீதான ட;ரள்வ;வரி 20 சதவீதமாக காணப்பட்டது. (1997 நவெம்பரில் 18 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது) உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யப்படும் தேங்காய் எண்ணெய்யுடன் காய்கறி எண்ணெய்களை கலப்படம் செய்வதனால் இறக்குமதி செய்யப்பட்ட மலிவான காய்கறி எண்ணெய்களின் கிடைப்பனவானது அதன் தரத்தில் வீழ்ச்சியை விளைவித்துள்ளது.

1982இல் நாடளாவிய ரீதியில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட வேளாண்மை தொகை மதிப்பின்படி தெங்கின் கீழான பரப்பளவு; கிட்டத்தட்ட 417,000 எக்டேயர் என மதிப்பிடப்பட்டது. எனினும் தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின்படி 1997இல் தெங்கின் கீழான பரப்பு; 1996 இல் இருந்ததைப் போன்றே கிட்டத்தட்ட

363,000 எக்டேயர்களாக விளங்கியது. பயிர்ச் செய்கையின் கீழான பரப்பை கருத்திற்கொள்ளும் போது சராசரி விளைவு சிறிதளவால் மேம்பாடடைந்து 1997 இல் எக்டேயருக்கு 7,198காய்களாக அமைந்து காணப்பட்டதாக மதிப்பிடப்பட்டது. எக்டேயருக்கான உச்ச விளைவு கிட்டத்தட்ட 15,000 காய்களாகும். தெங்கின் கீழான பரப்பின் கிட்டத்தட்ட 75 சதவீதமானவை 8 எக்டேயர்களுக்கும் குறைவான பரப்பினைக் கொண்ட சிறுவுடைமையாளர்களின் கையிலேயே காணப்பட்டது. எனவே குறைந்த விளைச்சலானது முக்கியமாக களப்பராமரிப்புப் புறக்கணிக்கப்பட்டதன் காரணமாக சிறுவுடைமையாளர்களின் மோசமான பயிர்ச் செய்கைப் பிரயோகத்தினால் விளைந்ததாகும். தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையானது அதன் விரிவாக்கப்பணியினூடாக பல்வேறு வகையான உள்ளீடுகள் மற்றும் அபிவிருத்தி உதவியின் பகிர்ந்தளிப்பு என்பனவற்றில் பெருமளவு முறையானதும் விஞ்ஞான ரீதியிலமைந்ததுமான அணுகுமுறையினைப் பின்பற்றி தெங்குக் காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

வரைபடம் 3.3
விலை உற்பத்திச் செலவுச் சுட்டெண்கள் - தெங்கு
(1990 = 100)




மீள் நடலுக்கு (இது ஈரலிப்பு பாதுகாப்பையும் ஊடு பயிர்ச்செய்கையும் உள்ளடக்கியது) தெங்குப் பயிர்ச்செய்கை சபையினூடாக வழங்கப்பட்ட தீர்வை அபிவிருத்தி உதவி இவ்வாண்டில் எக்டேயருக்கு ரூபா 38,750 ஆகக் காணப்பட்ட வேளையில் புதிய நடலுக்கு எக்டேயருக்கு ரூபா 40,000 ஆகக் காணப்பட்டது. தெங்குப்பயிர்ச் செய்கை சபையின் தீர்வை உதவிப் பணிகள் தனியார்துறை சிறுவுடைமைகளை இலக்காக கொண்டுள்ளதுடன் பொதுத் துறை தோட்டங்களுக்கும் 4 எக்டேயருக்கும் மேலான பரப்பைக் கொண்ட பெருந்தோட்டங்களுக்கும் அவை வழங்கப்படவில்லை. தெங்குப் பயிர்ச்செய்கை சபை உதவியூடாக இவ்வாண்டில் மீள் நடப்பட்ட பரப்பு 1996 இலும் பார்க்க இருமடங்கிற்கும் மேலாக அதிகரித்து 1,221 எக்டேயர்களாக விளங்கியது. புதிதாக நடப்பட்ட பரப்பு 11 சதவீதத்தினால் 931 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. அத்துடன் தெங்குப்பயிர்ச் செய்கை சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு காணியை தயார்படுத்தியிருந்த பயிர்ச் செய்கையாளருக்கு (ஒருவருக்கு 10 இற்கு மேற்படாத) மரக்கன்றுகளை வீட்டுத் தோட்டங்களுக்கென தெங்குப் பயிர்ச் செய்கைச் சபை இலவசமாக வழங்கியது. தோட்டத்துறை உற்பத்தியை ஏற்றுமதி சார்ந்த தெங்கு உள்ளீட்டுப் பதனிடல் கைத்தொழில்களுக்கு விடுவிக்கும் வகையில் உள்ளூர்ப் பாவனையாளர்களுக்காக வீட்டுத் தோட்ட உற்பத்தியை ஊக்குவிப்பதை தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை நோக்கமாகக் கொண்டுள்ளது. வீட்டுத் தோட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்ட கன்றுகள் 1.1 மில்லியனிற்கு சிறிதளவால் அதிகரித்தன. சாதகமான வானிலை நிலைமைகள் 1997 இல் இக்கள நடவடிக்கைகளில் மேம்பாடொன்றிற்கு வழிவகுத்தன. எனினும் தெங்குத்துறைக்கு வழங்கப்பட்ட வளமாக்கி 11 சதவீதத்தினால் 34,700 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இவ் வீழ்ச்சி 1997 செத்தெம்பரில் அமோனியா சல்பேற்று மீதான உதவிக் கொடுப்பனவு அகற்றப்பட்டதன் காரணமாக அமோனிய சல்பேற்றின் பாவனை 1996 உடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட 40 சதவீதத்தினால் குறைவடைந்தமையினால் ஏற்பட்டதாகும்.

கைத்தொழில், வீடமைப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் என்பனவற்றிற்கான கேள்வி அதிகரிப்பின் விளைவாக தென்னங்காணிகள் துண்டாடப்படுவது 1997 இலும் தொடர்ந்தது. பெரும்பாலான தெங்கு மற்றும் இறப்பர் காணிகள் அமைந்துள்ள தாழ்நில ஈரவலய பிரதேசங்களில் (முக்கியமாக கம்பகா, களுத்துறை, மாவட்டங்கள்) காணிக்கான கேள்வி அதியுயர்வானதாகும். வீடமைப்பு போன்ற நோக்கங்களுக்கு இக் காணிகள் பொருத்தமான தாக அமைந்துள்ளதுடன் உண்மைச் சொத்துக்களிலிருந்து பெறப்படும் உயர் வருமானமும் இணைந்து உயர் உற்பத்தித்திறன் கொண்ட தென்னங்காணிகளின் குறைப்பிற்கு வழிவகுத்து தெங்குத் துறையின் சராசரி விளைச்சலில் குறைப்பினை ஏற்படுத்தியுள்ளது. தற்போதைக்கு மேல் மாகாண சபையானது (களுத்துறை, கொழும்பு, கம்பகா மாவட்டங்களை உள்ளடக்கி) உயர்விளைச்சல் தரும் தென்னங்காணிகள் துண்டாடப்படுவதனை நிருவாக வழிமுறைகளினூடாக கட்டுப்படுத்துகின்றது. தெங்குத்துறை ஆண்டொன்றிற்குக் கிட்டத்தட்ட 1,000 எக்டேயர்கள் தென்னங்காணிகளை இழப்பதாக தெங்கு பயிர்ச்செய்கைச்சபை மதிப்பிட்டுள்ளது. விளைச்சல் குறைந்த காணிகள்

மட்டுமே துண்டாடப் படுகின்றது என்ற எடுகோளின் கீழ் ஆண்டொன்றிற்கு உற்பத்தியில் கிட்டத்தட்ட 6 மில்லியன் காய்கள் இழக்கப்படுவதாக தெங்குப் பயிர்ச் செய்கை சபை மதிப்பிடுகின்றது. உற்பத்தியில் ஏற்படும் இழப்பை ஈடுசெய்யவதற்காக மகாவலி செயற்றிட்ட பிரதேசங்கள் போன்ற ஏனைய பிரதேசங்களில் தெங்குப் பயிர்ச்செய்கையை தெங்கு பயிர்ச்செய்கை சபை பிரபல்யப்படுத்துகின்றது.

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் மதிப்பீடுகளின்படி 1997 இல் உற்பத்திச் செலவு காயொன்றிற்கு 4 சதவீதத்தினால் ரூபா 2.26 இற்கு அதிகரித்தது. எனினும் பாரிய பெருந் தோட்டங்களில் உற்பத்திச் செலவு காயொன்றிற்கு கிட்டத்தட்ட ரூபா 3.50 இற்கு அதிகரித்தது. உடன்காய்களின் சில்லறை விலைகள் முன்னைய ஆண்டின் காயொன்றிற்கான ரூபா 9.30 உடன் ஒப்பிடுகையில் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் காயொன்றிற்கு சராசரியாக ரூபா 13.15இற்கு அதிகரித்துக் காணப்பட்டன. இது முக்கியமாக 1996 இல் வழங்கலில் எதிர்நோக்கப்பட்ட பற்றாக்குறையின் விளைவாக ஏற்பட்டதாகும். வழங்கலில் அதிகரிப்பு ஏற்பட்டமையைத் தொடர்ந்து 1997இன் நடுப்பகுதியில் விலைகள் வீழ்ச்சியடைந்ததெனினும் விளைச்சலற்ற காலம் ஆரம்பமானதைத் தொடர்ந்து ஆண்டின் இறுதிக் காலாண்டில் விலைகள் மீண்டும் அதிகரித்தன. 1997 இல் சராசரி சில்லறை விலை காயொன்றிற்கு ரூபா 11.85 ஆக விளங்கி 26 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. ஆண்டுத் தொடக்கத்தில் உள்ளூர்ச் சந்தையில் அதியுயர் மட்டங்களைப் பதிவு செய்த தேங்காயெண்ணெயின் விலைகள் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் காட்டின. காய் வழங்கலில் ஏற்பட்ட மேம்பாடும் பிரதியீட்டுப் பொருளான காய்கறி எண்ணெயின் அதிகரித்த இறக்குமதிகளும் விலைகளில் பெரும் குறைப்பை விளைவித்தன. முதன்மை ஏற்றுமதி நாடான பிலிப்பைன்சிலிருந்தான தேங்காய் எண்ணெய் வழங்கலில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் பதிலீட்டு காய்கறி எண்ணெய்களின் உலக வழங்கல் அதிகரித்தமை என்பன காரணமாக தேங்காய் எண்ணெயின் பன்னாட்டு விலைகளும் 1997இல் முனைப்பாக வீழ்ச்சியடைந்தன. 1997 சனவரியில் தேங்காய் எண்ணெய்யின் சராசரி பன்னாட்டு விலை மெற்றிக் தொன் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 784 (கொ.கா.க ரொட்டர்டேம்) ஆகவிருந்த வேளையில் 1996 இன் இதே மாதத்தில் அதன் விலை மெற்றிக் தொன் ஒன்றுக்கு ஐ.அ. டொலர் 709 ஆகக் காணப்பட்டது. திசெம்பர் அளவில் விலைகள் ஐ.அ.டொலர்கள் 584 இற்கு (கொ.கா.க. ரொட்டர்டேம்) வீழ்ச்சியடைந்தது. கிழக்காசிய நாடுகளின் நாணய நெருக்கடியும் தேங்காய் எண்ணெய் விலை வீழ்ச்சிக்கு பங்களிப்புச் செய்தது. உலர்த்திய தேங்காயின் பன்னாட்டு விலைகள் தேங்காய் எண்ணெயின் விலைப் போக்கினை ஒத்ததாகக் காணப்பட்டது.

மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் சராசரி ஏற்றுமதி விலை(க.த.இ) 1997 இல் காயொன்றிற்கு ரூபா 9.63 இற்கு சிறிதளவால் அதிகரித்தது. உலர்த்திய தேங்காய்த் துருவலின் சராசரி ஏற்றுமதி விலை (க.த.இ) மெற்றிக் தொன் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 1,085ஆகவிருந்த வேளையில் தேங்காய் எண்ணெய் மற்றும் உலர்த்திய தேங்காய் என்பனவற்றின் சராசரி ஏற்றுமதி விலைகள் மெற்றிக் தொன்னொன்றிற்கு முறையே ஐ.அ.டொலர் 841, ஐ.அ, டொலர் 824 ஆகக் காணப்பட்டன. இலங்கையின் உலர்த்திய தேங்காய்த்துருவலின் தரமானது உலகில் மிகச் சிறந்ததொன்றாவதுடன் ஏற்றுமதியில் இலங்கையானது பிலிப்பைன்சுக்கு அடுத்ததாக இரண்டாமிடத்தில் திகழ்கின்றது. மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதி 6 சதவீதத்தினால் 505 மில்லியன் காய்களுக்கு அதிகரித்தது. அனைத்து தெங்கு உற்பத்திகளினதும் ஏற்றுமதி வருமானங்கள் 14 சதவீதத்தினால் அதிகரித்தன. ஏற்றுமதி வருமானங்களின் 28 சதவீதங்கொண்ட கணிசமான அதிகரிப்பானது உள்ளீடலல்லாத உற்பத்திகளின் ஏற்றுமதியிலிருந்து பெறப்பட்டது. பன்னாட்டுச் சந்தைக்கு செயற்படு சிரட்டைக்கறி மற்றும் கயிறு/தும்பு உற்பத்திகளை வழங்கும் முக்கியவொரு நாடாக இலங்கை திகழ்கின்றது.

1997 இல் ஏற்றுமதி செய்யப்பட்ட பல்வகையான தெங்கு உற்பத்திப் பொருட்களுக்கு 1996 இலிருந்த அதேயளவான தீர்வை வீதங்களே பிரயோகிக்கப்பட்டன. அதிகூடிய தீர்வை வீதமானது உலர்த்திய தேங்காய் துருவலுக்கு பிரயோகிக்கப்பட்டது. ஏற்றுமதி செய்யப்பட்ட உலர்த்திய தேங்காய்த்துருவலுக்கு மெற்றிக் தொன்னொன்றுக்கு ரூபா 1000 பிரயோகிக்கப்பட்டது. 1997 இல் மொத்தத் தீர்வை சேகரிப்புக்கள் 9 சதவீதத்தினால் ரூபா 110 மில்லியனிற்கு அதிகரித்தன. சேகரிக்கப்பட்ட தீர்வையானது தீர்வை உதவித் திட்டங்களினூடாக தெங்குத் துறையில் மீண்டும் முதலீடு செய்யப்பட்டது. 1997 இல் ரூபா 12.9 மில்லியன் மீள் நடுகைக்கும், ரூபா 12.2 மில்லியன் புதிய நடுகைக்கும், ரூபா 22.6 மில்லியன் வீட்டுத் தோட்டங்களில் தென்னங் கன்றுகளை நடுவதற்கும் வழங்கப்பட்டது.

உலர்த்திய தேங்காய்த்துருவலின் தரத் தினை மேம்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பங்களை நிறுவுவதனை ஊக்குவிப்பதற்கான உலர்த்திய தேங்காய் துருவல் ஆலை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 1997 இல் நடைமுறைப் படுத்தப்பட்டதுடன் ஏற்பட்ட செலவினத்தை ஈடுசெய்வதற்காக 17 ஆலைகளுக்கு ரூபா 5 மில்லியன் வழங்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட தீர்வையிலிருந்து இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கு பகுதியளவில் நிதியளிக்கப்பட்டது. அதாவது உலர்த்திய தேங்காய்த்துருவல் தொழிற் சாலைகளின் தனிப்பட்ட ஆலை அபிவிருத்தி நிதியக் கணக்குகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. புதிய தொடர்ச்சியாக காயவைக்கும் செயல் முறையையும் நீராவி முறையையும் நிறுவி உலர்த்திய தேங்காய்த் துருவல் ஆலையை நவீனமயப்படுத்து வதற்காக ஆலையொன்றிற்கு ரூபா 3 மில்லியனிற்கு மேற்படாத கொடை உதவியும் வழங்கப்பட்டது. இதன்படி 1997 இல் நவீனமயப்படுத்தலின் பல்வேறு படிமுறைகளிலுள்ள 20 உலர்த்திய தேங்காய்த் துருவல் ஆலைகள் ரூபா 17.68 மில்லியன் கொண்ட மொத்தத் தொகையொன்றினைப் பெற்றுக் கொண்டன. தும்பு ஆலை நவீன மயப்படுத்தல் திட்டத்திற்கு தீர்வை நிதியத்திலிருந்து கொடை உதவியும் வழங்கப்பட்டது. தும்பைப் பிரிக்கும் இயந்திரத்தினை நிறுவுவதற்கு ரூபா 250,000 இற்கு மேற்படாத தொகையொன்றும் தேங்காய்மட்டையை தும்பாக்கும் இயந்திரத்தினை நிறுவுவதற்கு ரூபா 225,000 இற்கு மேற்படாத தொகையொன்றும் ஆலையொன்றிற்கு வழங்கப்படும். இத்துடன் பிரதான மின்வலு வழங்கலைப் பெறுவதற்கான செலவில் 50 சதவீதத்தை ஈடுசெய்வதற்காக ஆகக் கூடிய கொடுப்பனவு ரூபா 250,000 என்ற நியதிக்குட்பட்டு கொடை ஒன்று வழங்கப்படும் வேளையில் உள்ளக மின்னூட்டலுக்காக ஆலையொன்றிற்கு ஆகக்கூடிய கொடுப்பனவாக ரூபா 75,000 கிடைக்கத்தக்கதாக வுள்ளது. மட்டையை தும்பாக்குவதற்கான இயந்திரத்தினை நிறுவுவதற்கும் மின்னூட்டலுக்கும் ஆலையொன்றிற்கு வழங்கப்படும் ஆகக் கூடிய கொடை உதவி ரூபா 300,000 ஆகும். தும்பு ஆலை நவீனமயப்படுத்தல் திட்டத்தின் கீழ் 1997 இல் 21 தும்பு ஆலைகள் ரூபா 2.6 மில்லியன் கொண்ட கொடை உதவியைப் பெற்றுக் கொண்டன.

விளைச்சலை அதிகரித்தல். வேறுபட்ட இயற்கை வளமாக்கியின் பிரயோகம், முக்கிய கிருமி மற்றும் நோய்களின் ஒருங்கிணைக்கப்பட்ட கட்டுப்பாட்டு முறைகள், தெங்கை அடிப்படை யாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களினை விருத்தி செய்தல் (ஏற்றுமதி சந்தைக்காக செவ்விளநீரின் பசுமைக்காலத்தைத அதிகரித்தல் போன்றன) போன்ற பல்வேறு ஆராய்ச்சி நடவடிக் கைகளை தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் மேற் கொண்டது. தெங்குப் பயிர்ச்செய்கையாளர்களின் அறிவு மற்றும் தேர்ச்சி என்பனவற்றை மேம்படுத்து வதற்காக தெங்கு ஆராய்ச்சிச் சபையினால் பண்ணைப் புத்தாக்கம் மற்றும் விரிவாக்கப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

## ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள்

கோப்பி, கொக்கோ போன்ற குடிபானப் பயிர்கள், கராம்பு, ஏலம், மிளகு, கறுவாப்பட்டை, சாதிக்காய் போன்ற வாசனைப் பொருட்கள் சிற்றனெல்லா மற்றும் கறுவா இலை எண்ணெய் என்பன போன்ற பல்வேறுபட்ட பயிர்களை ஏனைய ஏற்றுமதிப்பயிர்கள் உள்ளடக்குகின்றன. கறுவா தவிர்ந்த ஏனைய பயிர்கள் வீட்டுத் தோட்டங்களில் கலப்புப் பயிராக பயிரிடப்படுகின்றன. கறுவாவா னது தென் மாகாணத்திலுள்ள பெரிய தோட்டங் களில் மிகவும் நன்கமைந்த முறையில் பயிரிடப் படுகின்றது.

ஏற்றுமதி வேளாண்மை திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி கராம்பு, மிளகு, சிற்றனெல்லா, கொக்கோ போன்றவற்றின் உற்பத்தி முன்னைய ஆண்டு உற்பத்தி மட்டங்களைப் பார்க்கிலும் 1997 இல் மேம்பட்டு காணப்பட்டது. சாதிக்காய், கறுவாயிலை எண்ணெய்,கோப்பி என்பனவற்றின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. இலாபமற்ற விலைகளின் காரணமாக கடந்த காலத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் காட்டிய கராம்பு உற்பத்தி 1997 இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவு செய்தது. பூக்கும் காலத்தில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளின் முக்கிய காரணத்தால் கராம்பு உற்பத்தி முன்னைய ஆண்டினைக் காட்டிலும் 62 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அறுவடைக்கான உயர் செலவு காரணமாக பெரும்பாலான வேளாண்மையாளர்கள் முழு அளவில் அறுவடையை மேற்கொள்ளவில்லை. கராம்பு இறக்குமதியினை கடடுப்படுத்துவதற்காக இந்தியா இன்னும் தொடர்ந்து தீர்வையல்லா தடைகளை விதிக்கின்றது. தீர்வையல்லாத் தடைகளை அகற்றுவதற்கு தென்னாசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளின் பேச்சுவார்த்தைகளில் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

மிளகு உற்பத்தி 12 சதவீதத்தினால் அதிகரித் திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் உற்பத்தியில்

அட்டவணை 3.5

ஏனைய ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி

மெற்றிக் தொன்கள்

| பயிர் | 1995(அ) | 1996(அ) | 1997(ஆ) |
|---|---|---|---|
| கோப்பி | 2,159 | 2,158 | 2,119 |
| கொக்கோ | 1,542 | 1,628 | 1,709 |
| கருவாச்சுருள் | 10,815 | 10,891 | 11,056 |
| கருவா இலை எண்ணெய் | 205 | 110 | 100 |
| மிளகு | 3,326 | 3,988 | 4,471 |
| கராம்பு | 1,500 | 1,437 | 2,333 |
| ஏலம் | 75 | 75 | 75 |
| சாதிக்காயும் சாதிப்பத்தியும் | 988 | 1,198 | 1,067 |
| சிற்றெனெல்லா(புல்லெண்ணெய்) | 180 | 190 | 210 |

மூலம் : இலங்கை வேளாண்மை ஏற்றுமதித் திணைக்களம்

(அ) திருத்தியமைக்கப்பட்டவை

(ஆ) தற்காலிகமானவை.

ஏற்பட்ட இம்மேம்பாட்டிற்கு அதிகரித்த விளை நிலப்பரப்பும் அதேபோன்று 1996 இலும் 1997 இலும் காணப்பட்ட கவர்ச்சிகரமான விலைகளின் காரணமாக மேம்பட்ட முகாமைத்துவமுமே காரணங்களாகும். தொடர்ந்து நான்காவது ஆண்டாக உலக நுகர்வு உற்பத்தியை விஞ்சிக் காணப்பட்டதன் விளைவாக இருப்பு மிகக் குறைந்த மட்டத்திற்கு குறைவடைந்தது. இதன் பெறுபேறாக 1997 இல் மிளகின் பன்னாட்டு விலைகள் கி.கிறாமொன்றுக்கு ரூ. 223 இற்கு 73 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன் விளைவாக சராசரி பண்ணை விலையும், ஏல விலைகளும் முறையே கி.கிறாமிற்கு ரூ. 198.24 இற்கும் கி.கிறாமிற்கு ரூ.224.89இற்கும் அதிகரித்து இரு மடங்கிற்கும் கூடுதலான அதிகரிப்பினைக் காட்டின. வெள்ளை மிளகின் பன்னாட்டு விலைகள் கறுப்பு மிளகின் விலையை விட ஏறத்தாள ஒன்றரை மடங்கு அதிகமாகும். இதனால் கறுத்த மிளகினை வெள்ளை மிளகிற்கு மாற்றுவது ஏற்றுமதிச் சந்தையில் போட்டியிடுவதற்கான சிறந்ததொரு முன்மொழிவாக இருக்கும்.

இவ்வாண்டுக் காலத்தில் இவ்வகையில் 9 சதவீதத்தினாலும் 8 சதவீதத்தினாலும் கி.கிறாமிற்கு முறையே ரூ.56 இற்கும் ரூ. 366 இற்கும் வீழ்ச்சியடைந்த கோப்பி மற்றும் கறுவா எண்ணெய் என்பன தவிர்ந்த ஏனைய அனைத்துப் பயிர்களும் பண்ணை விலைகளில் முன்னேற்றம் கண்டன. பண்ணை விலைகளில் காணப்பட்ட மற்றைய குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் சாதிப்பத்திரி (78 சதவீதம்) ஓட்டுடனான சாதிக்காய் (22 சதவீதம்) கறுவாச் சுருள் (43 சத வீதம்) என்பனவற்றினால் பதிவு செய்யப்பட்டன.

1997 இல் கோப்பி, மிளகு, கொக்கோ, கறுவா மற்றும் ஏலக்காய் என்பன புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு ஏறத்தாள 700 எக்டேயர்களினால் அதிகரித்தமையின் மூலம் இப் பயிர்களின் கீழான மொத்த நிலப்பரப்பு 68,122 எக்டேயர்களுக்கு 1 சதவீதத்தினால் அதிகரித்தது. முன்னைய ஆண்டினைப் போன்றே, புதிதாகப் பயிரிடப்பட்டதில் பாரியளவு நிலப் பரப்பு மிளகின் கீழ் இருந்ததுடன் இவ்வாண்டில் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் 77 சதவீதத்திற்கும் வகைகூறியது.

1997 இல் ஏற்றுமதி வேளாண்மை பயிர் உதவித் திட்டத்தின் கீழான அபிவிருத்தி உதவி ரூ.27 மில்லியனுக்கு 21 சதவீதத்தினால் அதிகரித்தது. கடந்த இரு ஆண்டுகளைப் போன்று மிளகும் கறுவாவும் சேர்ந்து மொத்தப் பகிர்ந்தளிப்பில் 65 சதவீதம் கொண்ட முக்கிய பங்கிற்கு வகைகூறின.

இப் பயிர்களின் மொத்த ஏற்றுமதி அளவு முன்னைய ஆண்டின் ஏற்றுமதிகளைவிட 2 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. எனினும் மொத்த ஏற்றுமதிப் பெறுமதி ரூ.4,262 மில்லியனுக்கு 47 சதவீதத்திற்கு கூடுதலான கணிசமான அதிகரிப்பினைக் காட்டியமைக்கு இவ்வாண்டில் பெரும்பாலான பண்டங்களுக்கு பன்னாட்டுச் சந்தையில் நிலவிய கவர்ச்சிகரமான விலைகளே முக்கிய காரணமாகும். இப் பயிர்களின் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் மூன்றிலிரண்டிற்கும் கூடுதலான பங்கிற்கு கறுவா வகை கூறியது. இப்பயிர்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் கடந்த பல ஆண்டுகளாக அதிகரித்ததுடன் தற்பொழுது இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் அளவினைப் பெரும்பாலும் (ஏறத்தாள 92 சதவீதம்) அடைந்துள்ளன.

கறுவா தவிர்ந்த வாசனைப் பொருட்களின் உலக வர்த்தகத்தில் இலங்கையின் பங்கு 2 சதவீதத்திற்கும் குறைவானதாக இருந்தது. எனவே விலைகளைப் பாதிக்காத வீதத்தில் இவ்வாசனைப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான உள்ளார்ந்த வளம் காணப்படுகிறது. தென்னை நிலங்களில் இடைப் பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதன் மூலம் பெரும்பாலான வாசனைப் பொருட்களின் உற்பத்தியினை அதிகரிக்க முடியும். தற்பொழுது ஏறத்தாள 5 சதவீதமான தெங்கு நிலங்களில் மட்டுமே இப் பயிர்களின் இடைப் பயிர் செய்கை காணப்படுகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் 1990இல் தொழிற்படத் தொடங்கிய நீண்டகாலப்

பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்டவாறு, 1997 திசெம்பரில் அதன் தொழிற்பாடுகளை நிறைவு செய்து கொண்டது. 1997 இறுதியில் மொத்தக் கடன் ஒப்புதல்களும் பகிர்ந்தளிப்புக்களும் முறையே ரூ.824 மில்லியனாகவும் ரூ.642 மில்லியனாகவும் விளங்கின.

இச் செயற்றிட்டத்தினால் அடையப்பட்ட திருப்திகரமான முன்னேற்றத்தினைக் கருத்திற் கொண்டு இரண்டாவது நிரந்தரப் பயன் அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்கு சிஎஉ 14.7 மில்லியன் கொண்ட கடன்வசதிகளை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பட்டது. கடன் தொடர்பாக அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு மிடையிலான பேச்சு வார்த்தைகள் 1997 செத்தெம்பரில் வெற்றிகரமாக முடிவடைந்தன.

## 3.4 உள்நாட்டு வேளாண்மை

### நெல்

1996ஆம் ஆண்டின் பின்னடைவின் பின்னர் நெல் உற்பத்தியானது 9 சதவீதத்தினால் 2.2 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு (107 மில்லியன் புசல்கள்) அதிகரித்தது. பெரும்போக மற்றும் சிறுபோகப் பயிர்செய்கைக் காலங்களில் உச்ச மட்ட உற்பத்தி பதிவு செய்யப்பட்டது. அதிகரித்த வளமாக்கிப் பயன்பாடு, பயிர்ச்சேதம் குறைவடைந்தமை மற்றும் விளைச்சலில் ஏற்பட்ட முன்னேற்றம் என்பன இந்த அதிகரித்த உற்பத்திக்குப் பொறுப்பாக இருந்தன.

உச்ச மட்ட விளைச்சல் மற்றும் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன காரணமாக நெல் உற்பத்தி 1996/97 பெரும்போகத்தில் 9 சதவீதத்தினால் மதிப்பிடப்பட்ட 1.46 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு (70 மில்லியன் புசல்கள்) அதிகரித்தது. பெரும்பான்மையான மாவட்டங்களில் கடந்த காலப் பெரும் போகங்களைவிட உற்பத்தியானது சிறப்பாக இருந்தது. அரச பாதுகாப்புப் படைகள் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல மாவட்டங்களையும் மீண்டும் கைப்பற்றி பாதுகாப்பு நிலைமைகள் அங்கு முன்னேற்றமடைந்திருப்பதனால் இந்த மாகாணங்களிலுள்ள சகல மாவட்டங்களும் முன்னேற்றகரமான செயலாற்றத்தைச் சுட்டிக் காட்டுவதுடன் வேளாண்மைச் செயற்பாடுகள் இங்கு பெரும்பாலும் வழமைக்குத் திரும்பியுள்ளதைக் காணக்கூடியதாகவிருக்கிறது.

மிகவும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்னவெனில் குருநாகலை மாவட்டத்தில் முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடும்போது 102,000 மெற்றிக் தொன்களாக இருந்த நெல் உற்பத்தி

**அட்டவணை 3.6**

நெல்துறை மீதான புள்ளி விபரங்கள்

| விடயம் | அலகு | 1996(அ) | | | 1997 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 499 | 250 | 749 | 473 | 257 | 730 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 425 | 235 | 660 | 443 | 247 | 690 |
| அறுவடை செ.ப.தேறிய பரப்பளவு | '000 எக்டேயர்கள் | 377 | 210 | 587 | 397 | 222 | 619 |
| உற்பத்தி | '000 மெ.தொன்கள் | 1,331 | 730 | 2,061 | 1,457 | 782 | 2,239 |
| | '000 புசல்கள் | 63,807 | 35,000 | 98,807 | 69,835 | 37,496 | 107,331 |
| விளைச்சல் (இ) | கி.கி. எக்டேயர்கள் | 3,534 | 3,477 | 3,513 | 3,670 | 3,529 | 3,618 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. மில் | 308 | 88 | 396 | 275 | 108 | 383 |
| உ.வி.தி. கீழ் கொள்வனவு செய்யப்பட்டவை | '000 மெ.தொன்கள் | 1 | - | 1 | - | - | |
| அரிசி இறக்குமதிகள் | '000 மெ.தொன்கள் | - | - | 341 | - | - | 306 |
| (நெல்லிக்குச் சமன்) | ('000 மெ.தொன்கள்) | (-) | (-) | (488) | (-) | (-) | (438) |

(அ திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அதே வேளையில் மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் சராசரி விளைவு கணக்கிடப்படுகின்றது.

மூலங்கள் : குடிமதிப்புபுள்ளி விபரத் திணைக்களம்
வேளாண்மைத் திணைக்களம்
வேளாண்மை, காணிகள், அமைச்சு
நெல் சந்தைப்படுத்தும் சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி


193,000 மெற்றிக் தொன்களாக அதிகரித்து 90 சதவீதத்திற்கு மேற்பட்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. ஆகக் கூடிய உற்பத்தி மட்டமாக 215,000 மெற்றிக் தொன்கள் அம்பாறை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டதுடன் இது பெரும் போக உற்பத்தியில் 15 சதவீதத்திற்கு வகை கூறியது. அம்பாறை, குருநாகல், பொலநறுவை, மற்றும் மாகாவலி "எச்" வலயம் ஆகியன ஒன்றிணைந்து பெரும்போக உற்பத்தியில் ஏறத்தாழ அரைப்பங்கு (49 சதவீதம்) உற்பத்திக்கு வகைகூறின.

1996ஆம்ஆண்டு 30 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்த சிறுபோக உற்பத்தி. 1997 ஆம் ஆண்டு சிறுபோக காலத்தில் பகுதியளவில் முன்னேற்றமடைந்து 782,000 மெற்றிக் தொன்களுக்கு (37 மில்லியன் புசல்கள்) 7 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. விளைச்சலில் ஏற்பட்ட அதிகரிப்பு அறுவடை செய்யப்பட்ட பரப்பு ஆகிய இரண்டும் வெளியீட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்தன. முன்னைய சிறுபோகத்துடன் ஒப்பிடுகையில் 8 மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்கள் 1997 ஆம்ஆண்டு சிறுபோகத்தில் முன்னேற்றகரமான வெளியீடுகளைப் பதிவு செய்தன. உற்பத்தியில் மிகவும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி அம்பாறை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டு 162,000மெற்றிக் தொன்களுக்கு 25 சதவீத குறைவைக் காட்டியது. இந்த உற்பத்தி வீழ்ச்சிக்கு மத்தியிலும், அம்பாறை மாவட்டம் நான்காவது தொடர்ச்சி யான வருடமாக ஆகக் கூடிய சிறு போக வெளியீட்டைப் பதிவு செய்ததுடன் மொத்த சிறுபோக உற்பத்தியில் 21 சதவீதத்திற்கு வகை கூறியது. அம்பாறை, பொலனறுவை, குருநாகல் மாவட்டங்கள் ஒன்றிணைந்த சிறுபோக உற்பத்தியில் 50 சதவீதத்திற்கு வகை கூறின.

ஒரு எக்டேயருக்கான மிகச் சிறந்த சராசரி விளைச்சல் 3,618 கிலோக் கிறாம்களை எய்தி ஆண்டுக்கான சராசரி நெல் விளைச்சல் 3 சதவீதத்தினால் முன்னேற்றமடைந்தது. ஒரு எக்டேயருக்கான 3670 கிலோக் கிறாம்களை எய்தி சராசரி விளைச்சல் பெரும்போக காலத்தில் 4 சதவீதத்தினால் அதிகரித்ததோடு இது 1987ஆம் ஆண்டின் மிகச் சிறந்த பெரும்போக விளைச்சலுக்கு (ஒரு எக்டேயருக்கு 3678 கிலோக்கிறாம்கள்)க்குச் சிறிதளவு குறைவாக இருந்தது. சிறுபோக காலத்தில் சராசரி விளைச்சல் ஒரு எக்டேயருக்கு 3,529 கிலோ கிறாம்கள் என்ற அடிப்படையில் 1 சதவீதத்தினால் முன்னேற்றமடைந்தது. 1983ஆம் ஆண்டு ஒரு எக்டேயருக்கு 3603 கிலோக் கிறாம்களாக பதிவு செய்யப்பட்ட உச்ச விளைச்சலுக்குப் பின் இதுதான் மிகச் சிறந்த விளைச்சலாகும்.

1996ஆம் ஆண்டு சிறுபோகத்தில் அம்பாறை மாவட்டத்திற்கு தனது இடத்தை விட்டுக் கொடுத்ததைத் தவிர 10 தொடர்ச்சியான வருடங்களாக உடவளவைப் பகுதி மிகச் சிறந்த விளைச்சலைப் பதிவு செய்தது. ஆயினும் 1997 சிறுபோகத்தில் உடவளவைப் பகுதி தனது பிரதான இடத்தை மீண்டும் கைப்பற்றியிருப்பதுடன் மிகச் சிறந்த சராசரி விளைச்சலான ஒரு எக்டேயருக்கு 5008 கிலோ கிறாம்களை (ஒரு ஏக்கருக்கு 97 புசல்கள்) பதிவு செய்துள்ளது.1996/97 பெரும்போக காலத்தில் மிகச் சிறந்த விளைச்சலான ஒரு எக்டேயருக்கு 5138 கிலோக் கிறாம்கள் (ஒரு ஏக்கருக்கு 100 புசல்கள்) மகாவலி "எச்"வலயத்தில் பதிவு செய்யப்பட்டது. உடவளவைப் பகுதி மற்றும் மகாவலி "எச்" வலயம் ஆகிய இரண்டும் பாரிய நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் உறுதிப்படுத்தப் பட்டிருப்பதால் பயிர்ச் செய்கைக்கான இடர்கள் இங்கு மிகவும் குறைவாகவே இருக்கிறது. இதனால் விவசாயிகள் உள்ளீடுகளான வளமாக்கி மற்றும் ஏனைய விவசாய இரசாயனங்கள் என்பவற்றில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டுவதால் முன்னேற்ற கரமான விளைச்சலுக்கு இட்டுச் செல்கிறது.

**வரைபடம் 3.4**
**நெல் உற்பத்தி**




முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 1996/ 97 பெரும்போக காலத்தில் சகல நீர்ப்பாசன ஆணைப் பிரதேசங்களிலும் அதாவது பாரிய நீர்ப்பாசனம் , சிறிய நீர்ப்பாசனம், மழை நீர் பெறும் பிரதேசங்களின் சராசரி விளைச்சல் அதிகரித்தது. பாரிய மற்றும் சிறிய நீர்ப்பாசனங்களைப் பெற்ற பிரதேசங்கள் இரண்டினதும் சராசரி விளைச்சல்கள் ஒவ்வொன்றும் முறையே எக்டேயர்கள் ஒன்றுக்கு 4,289 கிலோக் கிறாம்கள் மற்றும் 3,369 கிலோக் கிறாம்கள் என்ற

அடிப்படையில் ஒவ்வொன்றும் 10 சதவீதத்தினால் அதிகரித்தது. மழை நீர் நீர்ப்பாசனப் பிரதேசங்களின் சராசரி விளைச்சல் எக்டேயர் ஒன்றுக்கு 2843 கிலோக் கிறாம்களுக்கு 7 சதவீதத்தினால் அதிகரித்தது. 1996 ஆம்ஆண்டு சிறு போககாலத்தில் பாரிய நீர்ப்பாசனங்களைப் பெற்ற பிரதேசங்களின் சராசரி விளைச்சல் 5 சதவீத அதிகரிப்பையும் மேலும் 1997ஆம் ஆண்டு சிறுபோக காலத்தில் ஒரு எக்டேயருக்கு 4139 கிலோக் கிறாம்கள் என்ற அடிப்படையில் 8 சதவீத முன்னேற்றத்தையும் பதிவு செய்தது. முன்னைய வருட காலத்தில் வீழ்ச்சியடைந்திருந்த மழை நீர்ப்பாசனம் பெற்ற பிரதேசங்களுக்கான சராசரி விளைச்சல் சிறுபோக காலத்தில் எக்டேயர் ஒன்றுக்கு 2519 கிலோக் கிறாம்களுக்கு 10 சதவீத முன்னேற்றத்தை பதிவு செய்தது. அதே வேளையில் சிறிய நீர்ப்பாசனம் பெறும் பிரதேசங்களுக்கான சராசரி விளைச்சல் சிறுபோக காலத்தில் ஒரு எக்டேயருக்கு 2862 கிலோக்கிறாம் என்ற அடிப்படையில் 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

முன்னைய ஆண்டில் நெல் பயிரிடப்பட்ட மொத்தப் பரப்பு 18 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்ததுடன் 1996/97 ஆம் பயிர்ச்செய்கை ஆண்டுக் காலத்தில் மேலும் 3 சதவீதத்தினால் 730,000 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பு முன்னைய ஆண்டு பெரும்போக காலத்தில் 12 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்ததுடன் இவ்வாண்டில் 473,000 எக்டேயருக்கு மேலும் 5 சதவீத வீழ்ச்சி யையும் பதிவு செய்த. வேளையில் 1997 சிறுபோக காலத்தில் விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பு 3 சதவீதத்தினால் 257,000 எக்டேயர்களுக்கு அதிகரித்தது.

விதைக்கப்பட்ட பரப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியின் மத்தியிலும், பயிர்ச் சேத அளவில் காணப்பட்ட பாரிய குறைப்பின் காரணமாக 1996/97ஆம் பயிர்ச்செய்கை ஆண்டுக் காலத்தில் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு 5 சதவீத முன்னேற்றத்தைக் காட்டியது. கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 12 சதவீத பயிர்ச் சேதத்தின் அளவானது இவ்வாண்டில் 5 சதவீதத்தினால் குறைவடைந்தது. 1996 ஆம்ஆண்டின் கடுமையான வரட்சிக் காலநிலையுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டில் காணப்பட்ட முன்னேற்றகரமான காலநிலை, பயிர்ச்சேதம் குறைவடைந்தமைக்கு காரணமாக இருந்தது. 1995/96 ஆம்ஆண்டு பெரும் போக காலத்தில் குறிப்பிடத்தக்க வகையில் 15 சதவீதமாகப் பதிவு செய்யப்பட்டிருந்த பயிர்ச் சேதத்தின் அளவு 1996/97 ஆம் பெரும்போக காலத்தில் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பயிர்ச் சேதத்திற்கெதிராக வேளாண்மை காப்புறுதியைப் பெற்றுக் கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை 20,229 க்கு வீழ்ச்சியடைந்தது. அத்துடன் காப்புறுதி செய்யப்பட்ட பரப்பும் 20,896 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது நெல் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1 சதவீதத்தினால் 230,000 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தன. விதைக்கப்பட்ட பரப்புக்களின் அடிப்படையில் வழங்கப்பட்ட வளமாக்கிகள் 1996 ஆம் ஆண்டுக்காலத்துடன் ஒப்பிடுகையில் ஒரு எக்டேயருக்கு 311 கிலோக் கிறாம்களிலிருந்து இவ்வாண்டில் 1 சதவீதத்தினால் 315 கிலோக் கிறாம்களுக்கு மேம்பாடடைந்திருந்தது. முன்னைய பயிர்ச் செய்கை ஆண்டுடன் ஒப்பிடுகையில் முன்னேற்றகரமான வானிலை நிலைமைகள் நிலவியதன் காரணமாக வளமாக்கிகளின் பாவனை 1996/97 பயிர்ச்செய்கை ஆண்டில் மேம்பாடடைந்தது. வளமாக்கிப் பாவனையில் ஏற்பட்ட முனைப்பான மேம்பாடு காரணமாக இவ்வாண்டில் எக்டேயருக்கான விளைச்சல் அதிகரித்துக் காணப்பட்டது. 1996/97 பெரும் போக காலத்தில் வளமாக்கிப் பாவனை 2 சதவீதத்தினால் 140,000 மெற்றிக் தொன்களுக்கும் குறைவடைந்திருந்த போதிலும் 1997 சிறுபோக காலத்தில் வளமாக்கிப் பாவனை 1 சதவீதத்தினால் 91,000 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் 3 சதவீதத்தினால் ரூ.383 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. கடந்த பெரும்போகத்தில் வழங்கப்பட்ட 308 மில்லியன் ரூபாய் கடன்களுடன் ஒப்பிடுகையில் 1996/97 பெரும்போக காலத்தில் வழங்கப்பட்ட கடன்களின் அளவு ரூ. 275 மில்லியனாக இருந்தது. 1996 சிறுபோக காலத்தில் வழங்கப்பட்ட ரூபா 88 மில்லியன் கடன்களுடன் ஒப்பிடுகையில் 1997 சிறு போக காலத்தில் ரூபா 108 மில்லியன் இருந்தது.

கடும் வரட்சி நிலவிய சென்ற ஆண்டைவிட நெல் உற்பத்தியானது இவ்வருடப் பயிர்ச் செய்கைக் காலத்தில் மேம்பாடடைந்திருந்த போதி லும் இது ஒரு பகுதியளவிலான மீட்சியாகவே இருந்தது. 1997 பயிர்ச் செய்கை ஆண்டில் உற்பத்தி கடந்த தசாப்தத்தில் பதிவு செய்யப்பட்ட சராசரி உற்பத்தியைவிட 7 சதவீதம் குறைவானதாகும். உற்பத்தி வீழ்ச்சி காரணமாக நெல்லுக்கான திறந்த சந்தை

விலை தொடர்ந்தும் ஒரு புசலுக்கான 155 ரூபா (ஒரு கிலோ7.42 ரூபா) உத்தரவாத விலையைவிட உயர்வாக இருந்தது. இவ்வருட காலத்தில் அரச சார்புடைய விவசாயிகள் அமைப்புக்கள் நெல்லைக் கொள்வனவு செய்யுமென அரசு எதிர் பார்த்தமையினால் நெற்சந்தைப்படுத்தும் சபை (நெசச) எவ்வித நெல்லையும் கொள்வனவு செய்யவில்லை. இந்த அமைப்புக்களுக்கு அரச வங்கிகளினால் கடன்கள் வழங்கப்பட்ட அதே வேளை நெல் சந்தைப் படுத்தும் சபையின் சில களஞ்சியங்களும் இவைகளால் பயன்படுத்தப்பட்டன.

விரயம் மற்றும் விதை நெல் தேவைகளுக்கு சீராக்கம் செய்த பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லுக்குச் சமமான அரிசியின் அளவு 1,370,000 மெற்றிக் தொன்களாகும். மதிப்பிடப்பட்ட வருடாந்த நுகர்வை அடிப்படையாகக் கொள்கையில் இது சுய பூர்த்தி விகிதத்தில் ஏறத்தாள 74 சதவீதத்திற்கு வகை கூறியது. பற்றாக் குறையாகவுள்ள அரிசி இறக்குமதி செய்யப்பட வேண்டியுள்ளதுடன் 1996 இல் இறக்குமதி செய்த 341,000 மெற்றிக் தொன்களுக்கு எதிராக இவ்வாண்டில் 306,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. பல வருடங்களாக தலைக்குரிய அரிசி நுகர்வு படிப்படியாகக் குறைந்து வந்துள்ளதுடன் அக் குறைப்பினால் ஏற்பட்ட கலோரித் தேவைப்பாடானது கோதுமையை அடிப்படையாகக் கொண்ட உணவு வகைகள் மூலம் ஈடுசெய்யப்பட்டிருக்கிறது.

அரிசி தொடர்பான வியாபாரக் கொள்கையினால் 1997 இல் அரிசி வியாபாரம் கணிசமான அளவு நிச்சயமற்ற தன்மையைக் கொண்டிருந்ததுடன் இவ்வருட காலத்தில் விலைகளும் மிகையான அளவில் வேறுபட்டிருந்ததுடன் அத்துடன் பல்வேறு உணவுப் பண்டங்களின் வர்த்தகமும் எதிர்வு கூற முடியாத நிலையில் காணப்பட்டது. 1996 இல் உற்பத்தியில் ஏற்பட்ட ஒரு 27 சதவீத வீழ்ச்சிக்குப் பின்னர், பெரும்போக அறுவடை 9 சதவீத அதிகரிப்பை மட்டுமே பதிவு செய்ததுடன் வழங்கலில் ஏற்பட்ட பற்றாக்குறை சந்தையில் தெரிந்தது. எனினும் நிச்சயமற்ற கொள்கைச் சூழலிலும் கூட தனியார் துறையினர் கொள்வனவுக் கட்டளைகளை மேற்கொள்ள விரும்பினர். கடந்த காலங்களைப் போலவே உள்நாட்டு விலைகள் அதிகரிக்கத் தொடங்கியபோது குறுகிய காலமொன்றுக்கு தீர்வை விலக்களிப்பு வழங்கப்பட்டது. நாலாம் காலாண்டில் 181,025 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டமையினால் உள்நாட்டு வழங்கலின் அதிகரிப்புக்கு இது உதவியது. நிச்சயமற்ற தன்மையின் காரணமாக 1997 காலப்பகுதியில் பிணைய பண்டகசாலைக் காரர்களும் தாங்கிருப்பினைப் பேணவில்லை. உள்நாட்டு உற்பத்தியில் பற்றாக்குறை காணப்பட்டாலும் காணப்படாவிட்டாலும் சாத்தியமான வரையில் ஏற்கனவேயுள்ள தீர்வை அமைப்பு முறையின் கீழ் அதியுயர் வீதமொன்றில் நெற் துறைக்கு ஆகக் குறைந்த அளவிலான பாதுகாப்பினை வழங்குவதன் மூலம் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் ஆகிய இரு பிரிவினருக்குமான நலன்புரி நன்மைகளை அதிகரிக்கச் செய்யலாம். அரிசி வர்த்தகத்தில் அதனது ஈடுபாட்டினை புறக்கீடு செய்வது அரசுக்கு உகந்ததொன்றாக இருக்கும்

அண்மைக் காலத்தில் பத்தல கொட அரிசி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவன மானது பிஜி 357 எனும் நெல் இனம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. இந்த நெல் இனமானது பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பீடைகள் மற்றும் நோய்கள் என்பனவற்றை எதிர்க்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதுடன் நாட்டின் வேறுபட்ட கால நிலைக்கேற்ப மிகவும் தாக்குப் பிடிக்கக் கூடியதுமாகும். மேலும் விவசாயத் திணைக் களமும் பாஸ்மதி (ஏரி5) எனும் நெல் இனமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த இனம் உயர் தரத்தையும் உச்ச விளைச்சலையும் கொண்டது.

நெல்லிற்கான ஒன்றிணைக்கப்பட்ட பீடை முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் நாட்டின் வட கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலுள்ள சகல விவசாயிகள் நிலையங்களிலும் "யாயா"செய்கை விளக்கக் கருத்தரங்கு நடாத்தப்பட்டிருப்பதுடன் இத்திட்டத்தின் கீழ் 7,770 விவசாயிகள் பயிற்றப் பட்டுள்ளனர்.

## ஏனைய களப்பயிர்கள்

ஏனைய களப்பயிர்கள் மிளகாய், வெங்காயம், மற்றும் உருளைக்கிழங்கு போன்ற பெறுமதி கொண்ட பணப்பயிர்களிலிருந்து சோளம், குரக்கன் போன்ற தாழ்ந்த பெறுமதி கொண்ட பயிர்களை ஏனைய களப்பயிர்கள் உள்ளடக்குகின்றன. அவ்வப்போதைய நிலைமைகளைப் பொறுத்து மழைநீர் கிடைப்பனவு நிலைமைகளுக்கேற்ப வீட்டுத் தோட்டங்களிலும், சேனைப்பயிர்நிலங்களிலும் இவை பயிரிடப்படுகின்றன. இங்கு ஏனைய களப்பயிர்கள் தொடர்பாக பெரும்பாலான தரவுகள் பருமட்டமான மதிப்பீடுகளாகும்.

தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி குறிப்பாக

உயர் பெறுமதி கொண்ட பணப்பயிர்களான மிளகாய் (விசேடமாக 1997 சிறுபோக காலம்) மற்றும் உருளைக்கிழங்கு போன்ற ஏனைய களப்பயிர்கள் 1997 காலப்பகுதியில் குறைந்தளவான செயலாக்கத்தைக் கொண்டிருந்ததை சுட்டிக்காட்டுகின்றன. ஆயினும், பெரிய வெங்காய உற்பத்தி 16 சதவீதத்தினால் 1996 இல் 19,400 மெற்றிக் தொன்களிலிருந்து 1997இல் 22,500 மெற்றிக் தொன்களாக அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்கான பிரதான காரணம் 1997 இல் சராசரி விளைச்சல் 4 சதவீதத்தினால் எக்டேயருக்கு 7.6 மெற்றிக் தொன்களாக முன்னேற்றமடைந்ததுடன் பயிர் செய்யப்பட்ட பரப்பு 11 சதவீதத்தினால் அதிகரித்ததுமாகும். மாறாக, உருளைக்கிழங்கு உற்பத்தி 1996 இன் 100,800 மெற்றிக் தொன் உற்பத்தியுடன் ஒப்பிடும்போது 1997 இல் 34 சதவீதத்தினால் 66,500 மெற்றிக் தொன்களுக்கு கடுமையாக வீழ்ச்சியடைந்தது. பயிரிடப்பட்ட பரப்பு 1996 இன் 7900 எக்டேயரிலிருந்து 1997 இல் 6400 எக்டேயராக குறைவடைந்தமையும், உருளைக்கிழங்கிற்கான விளைச்சல் 19 சதவீதத்தினால் குறைவடைந்தமையுமே இதற்கான காரணமாகும். மிளகாய் உற்பத்தி 1996 இல் 18,400 மெற்றிக் தொன்களாகவிருந்து 1997இல் 2 சதவீதத்தினால் 18,100 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது எனினும் மிளகாய் பயிரிடப்பட்ட பரப்பு 1996 இல் 26,100 எக்டேயர்களாக இருந்து ஆய்விற்குரிய ஆண்டில் 8 சதவீதத்தினால் 24,100 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. 1996/97 பெரும்போக பயிர்ச் செய்கை காலத்தில் மிளகாய் பயிரிடப்பட்ட பரப்பு 2 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் உற்பத்தியும் 10 சதவீதத்தினால் அதிகரித்தது. ஆயினும் 1997 சிறுபோக காலத்தில் மிளகாய் பயிர்செய்யப்பட்ட பரப்பு 23 சதவீதத்தினால் கடுமையாக வீழ்ச்சியடைந்ததுடன் அதனைத் தொடர்ந்து உற்பத்தியிலும் 21 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது. அத்துடன் மிளகாய்க்கான சராசரி விளைச்சல் 16 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்விரு பயிர்களினதும் குறைந்த செயலாற்றத்திற்கான காரணம் அளவுக் கட்டுப்பாட்டின் ஊடாக இறக்குமதி உரிமம் வழங்கலின் மூலமான கடந்த கால மேலதிக பாதுகாப்பு நீக்கப்பட்டதாகும்.

1996இல் உற்பத்தி செய்யப்பட்ட 3800 மெற்றிக் தொன் எள்ளு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் 74 சதவீதத்தினால் 6,600 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. எள்ளு பயிர் செய்யப்பட்ட பரப்பு 1996 இல் 7,500 எக்டேயர்களிலிருந்து 1997 இல் 55 சதவீதத்தினால் 11,700 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. எள்ளுப் பயிர்ச் செய்கை அதிகரித்தமைக்கான காரணம் முன்னர் பணப்பயிரான மிளகாய் பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் குறிப்பாக சிறுபோக காலத்தில் எள்ளு பயிரிடப்பட்டமையாகும். சின்ன வெங்காய உற்பத்தி 1997 இல் குறைந்தளவில் அதிகரித்தது. 1996 இல் 17,000 மெற்றிக் தொன்களாக பதிவு செய்யப்பட்ட தட்டைப்பயறு உற்பத்தி 1997 இல் 18 சதவீதத்தினால் 14,000 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் உளுந்து, சோளம், பயறு மற்றும் சோயா அவரை என்பன 1997 இல் முறையே 8 சதவீதம், 22 சதவீதம், 10 சதவீதம், மற்றும் 43 சதவீத குறைவை பதிவுசெய்தது. சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1997 இல் இப்பயிர்களின் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டதற்கான காரணம் இப் பயிர்ச்செய்கைகளின் கீழ் கொண்டுவரப்பட்ட பரப்பு 1997 இல் குறைக்கப்பட்டமையாகும்.

உயர் பெறுமதி கொண்ட பணப் பயிர்களான உருளைக்கிழங்கு வெங்காயம் போன்றவற்றின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்கான காரணம் இறக்குமதி செய்யப்பட்ட இவ்வகைப் பண்டங்கள் மலிந்த விலையில் கிடைக்கக் கூடியதாக இருந்ததால் வேளாண்மையாளர்கள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு பிரச்சனையை எதிர்நோக்கியதாகும். 1996இல் இப்பண்டங்களுக்கான இறக்குமதிகள் அரசாங்கத்தினால் தாராளமயமாக்கப்பட்டதுடன் அவ்வப்போது விலைக் குறைப்புக்களை மேற்கொள்வதற்காகத் தீர்வைத் தளர்த்தல்களும் வழங்கப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவான மிளகாய், வெங்காயம், மற்றும் உருளைக்கிழங்கு என்பவற்றின் மூலமான இந்தியாவின் வேளாண்மையாளர்களின் உற்பத் திச் செலவுடன் ஒப்பிடுகையில் விளைச்சல் வேறுபாடு, உள்ளீட்டுக்கான உதவிக் கொடுப்பனவுகள் மற்றும் கூலி வேறுபாடுகள் என்பனவற்றின் பெருமளவு காரணத்தினால் உள்ளூர் வேளாண்மையாளர்களின் உற்பத்திச செலவு சார்புரீதியில் உயர்வானதாகக் காணப்படுகின்றது. நுகர்விற்கான உருளைக்கிழங்கு இறக்குமதி 1996இல் 25,740 மெற்றிக் தொன்களாக இருந்து 4 மடங்குகளுக்கு மேலாக 108,375 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. அத்துடன் கொ.க.க. விலை 1997 இல் 25 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. வருமானக் குறைவு காரணமாக பிரதானமாக உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கை குறைவடைந்ததன் காரணமாக விதை உருளைக் கிழங்கு இறக்குமதி 78 சதவீதத்தினால் 1,122 மெற்றிக் தொன்களுக்கு குறைவடைந்திருந்தது. 1996 இல் 9,777மெற்றிக்

தொன்களாக இருந்த செத்தல் மிளகாய் இறக்குமதி 1997 இல் 36 சதவீதத்தினால் 13,269 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்ததுடன் இதற்கான இறக்குமதி விலை 1997 இல் 47 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அத்துடன் இந்தியாவில் ஏற்பட்ட மிளகாய்ப் பயிருக்கான பெருவிளைச்சலும் இறக்குமதி விலையில் ஏற்பட்ட பெருவீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது. பெரிய வெங்காய இறக்குமதியும் 10 சதவீத விலை வீழ்ச்சி (கொககா) காரணமாக 34 சதவீதத்தினால் 119,317 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. இதனால் நுகர்வோர் நன்மையனு பவித்த போதிலும் முன்னர் உயர்ந்தளவில் பாதுகாக்கப்பட்டிருந்த உற்பத்தியாளர்கள் இறக்குமதி விலை வீழ்ச்சியினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

1996இல் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூபா.98.30 ஆகவிருந்த மிளகாய்க்கான சராசரி உற்பத்தியாளர் விலையானது 1997 மாச்சில் 16 சதவீதத்தால் ரூபா 82.65 விற்கு குறைவடைந்தது. உருளைக்கிழங்கிற்கான சராசரி உற்பத்தியாளர் விலையும் 1997 மாச்சில் 23 சதவீதத்தினால் கிலோக் கிறாம் ஒன்றுக்கு ரூபா 16.20விற்கு குறைவடைந்தது. அதே போன்று பெரிய வெங்காயத்திற்கான சராசரி உற்பத்தியாளர் விலை 1996 செத்தெம்பரில் கிலோக் கிறாம் ஒன்றுக்கு 15.83 ரூபாவாக இருந்து 1997 செத்தெம்பரில் 13 சதவீதத்தால் கிலோ ஒன்றுக்கு ரூபா 13.83 விற்கு வீழ்ச்சியடைந்தது.

அரசாங்கம் உள்நாட்டு வேளாண்மையாளர்களுக்கு குறிப்பிட்டளவான பாதுகாப்புத் தேவைப்பட்டதை உணர்ந்ததால், தெரிவு செய்யப்பட்ட முக்கியமான ஏனைய களப்பயிர்களுக்கு 1997 ஓகத்தில் உற்பத்தியாளர் விலைத்திட்டம் ஒன்றை அறிமுகம் செய்தது. இதன் பிரகாரம் சிபார்சு செய்யப்பட்ட விலை வீச்சு மிளகாய் ஒரு கிலோக் கிறாமுக்கு ரூபா 55 இலிருந்து ரூபா 70 வரை பெரிய வெங்காயம் ஒரு கிலோக்கிறாமுக்கு ரூபா 12 இலிருந்து 14 வரையும், உருளைக்கிழங்கு ஒரு கிலோக் கிறாமுக்கு ரூபா 20 தொடக்கம் ரூபா 25 வரையும், சோளம் ஒரு கிலோக் கிறாமுக்கு ரூபா 10 இலிருந்து 12 வரையும், பயறு ஒரு கிலோக் கிறாமுக்கு ரூபா 30 தொடக்கம் ரூபா 40 வரையும், தட்டைப்பயறு ஒரு கிலோக் கிறாமுக்கு ரூபா 15 இலிருந்து 20 வரையும், துவரம் பருப்பு ஒரு கிலோக்கிறாமுக்கு ரூபா 20 தொடக்கம், ரூபா 30 வரையும், நிலக்கடலை ஒரு கிலோக் கிறாமுக்கு ரூபா 15 தொடக்கம் ரூபா 25 வரையும் மற்றும் சின்ன வெங்காயம் ஒரு கிலோக் கிறாமுக்கு ரூபா 15 தொடக்கம் ரூபா 18 வரையும் விலை நிர்ணயிக்கப் பட்டது. இத் திட்டத்தின் கீழ் எப்போதாவது உற்பத்தியாளர் விலைகள் வீழ்ச்சியடையும்போது கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (கூமொவிநி) குறிக்கப்பட்ட விலை வீச்சுக்குள் இப் பண்டங்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினால் வழங்கப்படும் விலை குறிக்கப் பட்டளவு நெகிழ்ச்சித்தன்மையுடன் பண்டத்தின் தரத்தை பொறுத்துத் தீர்மானிக்கப் படும். கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினால் 1997 இல் கொள்வனவு செய்யப்பட்ட செத்தல் மிளகாய் 3 சதவீதத்தினால் 1797 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்த வேளை, கொள்வனவு செய்யப்பட்ட பெரிய வெங்காயமும் 44 சதவீதத்தினால் 1,570 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

1997 இல் இலங்கையிலும் இந்தியாவிலும் மேற் கொள்ளப்பட்ட பெரிய வெங்காயம், மிளகாய், மற்றும் உருளைக்கிழங்கு என்பனவற்றின் உற்பத்திச் செலவு தொடர்பான ஒப்பீட்டு ஆய்வுகள் இந்தியாவின் குறைந்த சராசரி உற்பத்திச் செலவுகளுக்கு தாழ்வான கிராமியக் கூலிகள், வளமாக்கி, வேளாண்மை இரசாயனங்கள், வலு நீர்ப்பாசனம் மற்றும் உயர்ந்த விளைச்சல் தரும் விதை வகைகள் என்பனவற்றிற்கு இந்திய அரசு வழங்குகின்ற பரந்தளவு உதவிக் கொடுப்பனவுகளே முக்கிய காரணங்கள் என்பதனை எடுத்துக்காட்டின. எனவே இந்தியாவில், உண்மைச் செலவுகளில் பெரும்பங்கு அரசினாலேயே வழங்கப்படுகிறது. மேலும் வேளாண்மையாளரின் சந்தைப்படுத்தல் தொடர்பான இடர்பாடுகளைக் குறைப்பதற்காக அரசினால் பல்வேறு தலையீடுகள் மேற்கொள்ளப் படுகின்றன. இலங்கையில் இவ்வேளாண்மைப் பயிர்களின் உற்பத்திச் செலவில் மிகப்பெரும் செலவுக்கூறாக தொழிலாளர் செலவு காணப் படுகின்றது. எடுத்துக்காட்டாக பெரிய வெங்காயத்தில் இச்செலவு ஏறத்தாள 53 சதவீதமாக இருக்கின்ற வேளையில் இந்தியாவில் ஏறத்தாள 26 சதவீதமாக இருக்கிறது. இலங்கையின் வெங்காயம் மற்றும் மிளகாயின் சராசரி விளைச்சல் இந்தியாவின் விளைச்சலுடன் ஒப்பிடத்தக்கனவாகும். மலிவான இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களுடன் போட்டியிடக் கூடியதாக இருப்பதற்கு வேளாண்மையை மிக விரைவாக நவீனப்படுத்துவதற்குப் புறம்பாக, இலங்கை வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மூலவளங்களை சிறப்பாக தொழிலாளர்களின் உற்பத்தியாற்றலை கணிசமாக அதிகரிக்க வேண்டியிருக்கும். உடனடி நடவடிக்கையாக 35 சதவீதமான

ஆகக் கூடிய தீர்வையைக் கொண்ட நியாயமான அளவு பாதுகாப்பினை குறிப்பிட்ட காலப்பகுதி வரையும் வழங்கி அதன் பின்னர் படிப்படியாகக் குறைக்கும் திட்டத்தினை கொண்டிருக்கலாம். இத்தகைய வழிமுறைகள் ஒழிவு மறைவின்றியிருக்க வேண்டியதுடன் இதன் மூலம் வேளாண்மையா ளர்கள் இந்த வழி முறைகளை நன்கறிந்தவர் களாகவும் உச்ச மட்டத்தில் மூலவளங்களை ஒதுக்கீடு செய்வதற்குத் தயாராகவும் இருப்பர்.

வேளாண்மையாளர்களுக்குப் பொருத்த மான விதைப் பொருட்களின் கிடைப்பனவினை அதிகரிப்பதும் அதிகரித்த விளைச்சலுக்கு முக்கியமான தொன்றாகும். விதைப் பொருட்கள் மீதான புதிய கொள்கைகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் தனியார்துறை தரமான விதைகளை போதுமான ளவிற்கு உற்பத்தி செய்யக்கூடியனவாக அல்லது இறக்குமதி செய்யக் கூடியனவாக இருத்தல் வேண்டும். எனினும் இலங்கைக்கான பெரிய வெங்காய விதைகளின் ஏற்றுமதி மீது இந்தியா விதித்துள்ள தீர்வையில்லாத் தடைகள் போன்ற பல்வேறு தடைகள் காணப்படுகின்றன. எனவே இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காய விதைகள் கள்ளக்கடத்தல் விதைகளாக இருப்பதனால் இவை விதைகளின் தரத்தினை உத்தரவாதம் செய்வனவாகவில்லை. உயர்ந்த செலவும் குறைந்த தரமும் கொண்ட விதைகள் உற்பத்தியாக்கத்தின் மீது எதிர் மறையான தாக்கத்தி னையே கொண்டிருக்கும். இவ்விடயங்கள் தென்னாசிய முன்னுரிமை வர்த்தக ஒழுங்குகளில் பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்க்கப்பட வேண்டியதாகும்.

## காய்கறிகளும் பழங்களும்

காய்கறிப் பயிர்ச் செய்கையை தாழ் நிலை காய்கறிகள், மலையக, காய்கறிகள் என பரந்த பரப்பளவில் வகைப்படுத்தலாம். தாழ் நிலக் காய்கறிகள் பொதுவாக சிறுபோக காலத்தில் நீர்ப்பாசன நிலைமைகளைக் கொண்ட நெல் நிலங்கள் நீங்களாக, மழை நீரைப் பெறும் சிறு துண்டு நிலங்களில் அல்லது வீட்டுத் தோட்ட ங்களில் சிறியளவு வளமாக்கியினை அல்லது பீடை கொல்லிகளை உள்ளீடாகப் பயன்படுத்தி பயிர் செய்யப்படுகின்றன. அறுவடை பருவகால அடிப்படையிலேயே காணப்படுகின்றன. மலையக காய்கறிகள், நுவரெலியா, பண்டாரவளை, வெலிமட ஆகிய பிரதேசங்களில் நீர்ப்பாய்ச்சல் வசதியின் கீழ் பெருமளவு செறிவாகப் பயிர் செய்யப்படுவது டன் இம்மரக்கறிகளில் பெரும்பாலானவை பழுதுபடக் கூடிய வகைகளாகவும் காணப்பட்டன. இப் பயிர்ச்செய்கை காலவரையறைகளின்றி (பெரும் போக சிறுபோக காலங்களுக்கு மட்டுப்படுத்தப்பட வில்லை) இருந்ததுடன் ஆண்டு முழுவதும் அறுவடைகள் மேற்கொள்ளப்பட்டன. பாரிய மூலதன முதலீடுகளுடனான வர்த்தக ரீதியான காய்கறிப் பயிர்ச்செய்கை அண்மைக் காலத்தில் ஆரம்பமாகியுள்ளதுடன் இதன் உயர் இலாபத் தன்மை காரணமாக பிரபல்யமடைந்து வருகிறது. களக் கனிப் பயிர்ச்செய்கை நாடு முழுவதும் பரந்து சிதறிக் காணப்படும் பெரியளவு எண்ணிக்கையான சிறியளவு உற்பத்தியாளர் களினால் மேற்கொள்ளப்படுவதனால் காய்கறி உற்பத்தி மீதான தரவுகள் ஒரு மேலெழு ந்தவாரியான மதிப்பீடுகளேயாகும். குடிமதிப்புப் புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் வழங்கப் பட்ட மதிப்பீடுகளின்படி 1997 இல் காய்கறி உற்பத்தி 1996 உடன் ஒப்பிடுகைளில் ஏறத்தாள 2 சதவீதத்தினால் கிட்டத்தட்ட 419,000 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சிடைந்துள்ளது. இவ்வீழ்ச்சிக்கு பெரும்போகம் மற்றும் சிறுபோகம் ஆகிய இரு போகங்களிலும் தாழ் நிலக் காய்கறிச் செய்கைகள் (உதாரணமாக வெண்டைக்காய், தக்காளி, புடலங் காய்) 260,000 மெற்றிக் தொன்களுக்கு 5 சதவீதத் தினால் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரண மாகும். மாறாக, மலையக காய்கறிகளான லீக்ஸ், முள்ளங்கி போன்றவற்றின் உற்பத்தி 159,000மெற்றிக் தொன்களுக்கு 3 சதவீதத்தினால் அதிகரித்தது. இலங்கை மற்றைய நாடுகளைப் போன்று நன்கு முகாமைப்படுத்தப்பட்ட பழத் தோட்டங்களைக் கொண்டிருக்கவில்லை. எனினும் அன்னாசி, தெங்கு நிலங்களில் இடைப் பயிர்ச் செய்கையாக மிக நன்கமைந்த முறைகளில் குறிப்பாக கம்பகா மாவட்ட த்தில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. 1997 இல் வாழைப்பழம், மாம்பழம், பப்பாப்பழம், மற்றும் அன்னாசி போன்ற பழ வகைகளின் உற்பத்தி 6,646 மில்லியன் பழங்களுக்கு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதன்படி குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி வாழைப் பழங்களும் முந்திரிப் பருப்பும் இம்மொத்தத்தில் முறையே 63 சதவீதத்திற்கும் 29 சதவீதத்திற்கும் வகை கூறின.

பருவகாலக் கேள்வியும், காய்கறிகளின் வழங்கலைப் பாதித்த 1997 இன் இறுதிக் காலாண்டில் நிலவிய தொடர்ச்சியான மழை வீழ்ச்சியும் விலைகளில் பெருமளவு அதிகரிப்பு ஏற்படக் காரணமாகின. காய்கறிகள், மற்றும் பழங்களுக்கான நுகர்வோரின் கேள்விக்குப் புறம்பாக, சுற்றுலாக் கைத்தொழிலிருந்தும்

அதேபோன்று ஏற்றுமதித் துறையிலிருந்தும் இவ்விடயங்களுக்கு அதிகரித்த கேள்வி காணப்பட்டது. 1997 இல் காய்கறிகளினதும் பழவகைகளினதும் (உடன் மற்றும் உலர்ந்த) ஏற்றுமதிகள் முறையே 6869 மெற்றிக் தொன்களாகவும் 9886 மெற்றிக் தொன்களாகவும் அமைந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகைளில் முறையே 2 சதவீத 70 சதவீத அதிகரிப்புக்களைக் காட்டின. பெரும்பாலான காய்கறிகள் பெருமளவு தென்னாசியக் குடித்தொகையைக் கொண்டிருக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மாலை தீவிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உள்நாட்டுச் சந்தையில் காணப்பட்ட காய்கறிகளின் பற்றாக்குறையை ஈடுசெய்யும் பொருட்டு 1996 இன் 695 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 1997 இல் 750 மெற்றிக் தொன் மரக்கறிகள் இறக்குமதி செய்யப்பட்டன. அத்துடன் 1996 இன்16,733 மெற்றிக் தொன் இறக்குமதிகளுடன் ஒப்பிடுகைளில் 1997 இல் 19,511 மெற்றிக் தொன் பழங்களும் உலர் பழங்களும் (பேரீச்சம் பழம் போன்றவை) இறக்குமதி செய்யப்பட்டன. இதன்படி இலங்கை ஒரு தேறிய பழ இறக்குமதியாளராகவே உள்ளது.

வேளாண்மைத் திணைக்களம் ஈரலிப்பு மற்றும் உலர் வலயங்களில் தற்போது பயிரிடப்படும் மரபுரீதியான பழப் பயிர்களுக்குப் பதிலாக சிறந்த இலாபத்தையும் பெருமளவு வளர்ச்சிக்கான உள்ளார்ந்த வளத்தையும் கொண்ட புதிய உணவுப் பயிர்களைக் கண்டறிய தொடர்ந்தும் பரிசோதனைகளை நடத்தி வருகின்றது உலர் வலயத்திலும் உயர் நிலங்களிலும் திராட்சை மற்றும் ஸ்ரோபறி பயிர்ச் செய்கையும் தாழ் நில ஈரலிப்பு வலயத்தில் இலை வகை காய்கறிகளும் பயிரிட கண்டறியப்பட்டுள்ளன. இப் பயிர்கள் மிக உயர்ந்த வருமான உருவாக்க இயலளவைக் கொண்டுள்ளதாகக் கருதப்படுகிறது. தாழ் நில வலயத்தில் நெல் நிலையங்களின் உற்பத்தியாற்றலை மேம்படுத்துவதற்காகவும் கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களிலுள்ள குறிப்பிட்ட நெல் நிலங்களில் சில வகைக் காய்கறிகளை பயிர் செய்வதன் மூலம் பண்ணை வருமானத்தினை அதிகரிப்பதற்குமான மாற்று நடவடிக்கையாக வேளாண்மைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு குறிப்பிட்ட சாதகமான பெறுபேறுகளைக் காட்டியுள்ளது. எனினும் சுற்றாடல் காரணிகள் போன்ற தடைகள் (மண்ணின் தரம், வடிகால், உவர்நீர்) பன்முகப்படுத்தப்பட்ட நெல் நிலங்களின் கள நடவடிக்கைகளுக்கான கூலித் தொழிலாளர்களுக்கான அதிகரித்த கேள்வி போன்ற பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. உற்பத்தியாற்றலற்ற நெல் நிலங்களில் இலாபகரமான காய்கறி பயிர்ச் செய்கை மேற்கொள்வது தொடர்பாக வேளாண்மைத் திணைக்களம் ஆரம்ப ஆய்வுகளை மேற் கொண்டுவருகின்றது.

விதந்துரைக்கப்பட்ட புதிய வகை விதைகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலமும் நேரடியான வளமாக்கியின் பாவனை, மற்றும் விதந்துரைக்கப்பட்ட பீடைகொள்ளிகளைப் பிரயோகித்தல் என்பனவற்றின் மூலம் வேளாண்மையாளர்கள் காய்கறிச் செய்கையின் செலவைக் குறைக்க முடியுமெனவும் அவர்களின் வருமானத்தினை அதிகரிக்க முடியுமென்பதனையும் வேளாண்மைத் திணைக்களத்தின் ஆய்வுகள் எடுத்துக்காட்டின. எனினும் போதுமான நீர்ப்பாசன நீரின் கிடைப்பனவு போன்றவற்றில் தடைகளும் பெரும்பாலான வேளாண்மையாளர்கள் பகுதி நேர பயிர்ச் செய்கையாளர்களாகவே இருப்பதனால் கூலித் தொழிலாளர்களைப் பெறுவதிலுள்ள இடர்பாடுகளும் காணப்பட்டன. பயிற்சிகளிலும், செயல்முறை நிகழ்ச்சித் திட்டங்களிலும் பங்கேற்பதற்கு வேளாண்மையாளர்களை ஊக்குவிப்பது வேளாண்மை உற்பத்தியாற்றலை அதிகரிப்பதற்கு அவசியமெனக் கருதப்படுகிறது.

## சீனி

1997 இல் சீனி உற்பத்தி 63,897 மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டதுடன் 1996 இல் உற்பத்தி செய்யப்பட்ட 70,414 மெற்றிக் தொன்களிலும் பார்க்க 9 சதவீதம் குறைவானதாகும். இங்குரான, செவனகல, மற்றும் பெல்வத்தை ஆகிய அனைத்து மூன்று தொழிற்சாலைகளும் தாழ்ந்த வெளியீட்டு மட்டங்களையே பதிவு செய்தன. மிக உயர்ந்த 45 சதவீதம் கொண்ட வீழ்ச்சி 1996இன் 10,830 மெற்றிக் தொன்களிலிருந்து 1997 இல் 5,887 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்த இங்குரான தொழிற்சாலையினால் பதிவு செய்யப்பட்டது. செவனகல மற்றும் பெல்வத்தை சீனித் தொழிற்சாலைகளின் உற்பத்தி 1996 இலிருந்து 1997இல் முறையே 8 சதவீத, 1 சதவீத வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. இங்குரான தொழிற்சாலை தவறான முகாமைத்துவம் மற்றும் தொழிலாளர் அமைதியின்மை போன்ற பிரச்சனைகளில் சிக்கித் தவித்ததுடன் கம்பனி 1997 சனவரி 21ஆம் நாளன்று அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. 1997 இல் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவிலும் (30 சதவீதம்) பிழியப்பட்ட கரும்பின் அளவிலும் (44 சதவீதம்) கடுமையான குறைப்புக் காணப்பட்டது. பெரும்பாலான மாதங்களில் தொழிற்சாலை தொழிற்படவில்லை எனினும், தனிப்பட்ட கரும்புப் பயிரிடுவோர் தமது கரும்புச் செய்கை முதலீட்டிற்கான வருமானத்தைக்

கோரி அழுத்தம் கொடுத்தமையின் காரணமாக கம்பனி அவர்களின் கரும்பினைக் கொள்வனவு செய்து பிழிவதற்காக பெல்வத்தைத் தொழிற்சாலைகளுக்கு அனுப்பியது. ஆண்டின் பின்னரைப் பகுதியில் கம்பனி வைன் மதுசாரத்தையும் வெறியங்களையும் தயாரிக்கத் தொடங்கியது. 1997 இல் செவனகல தொழிற்சாலையில் பிழியப்பட்ட கரும்பின் அளவு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் பெல்வத்தைத் தொழிற்சாலையின் பிழியப்பட்ட கரும்பின் அளவு 1 சதவீதத்தினால் அதிகரித்தது. கடந்த இரு ஆண்டுகளைப் போன்றே 1997 இலும் கந்தளாய்த் தொழிற்சாலையில் எவ்விதமான சீனி உற்பத்தியும் இடம்பெறவில்லை.

1997 இல் செவனகலவில் கரும்பின் சராசரி விளைச்சல் 8 சதவீதத்தினால் எக்டேயெரான்றிற்கு 70 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. இதற்கு மாறாக பெல்வத்தை தொழிற்சாலையின் சராசரி விளைச்சல் எக்டேயரொன்றிற்கு 41 மெற்றிக் தொன்களாக மிகக் குறைந்து காணப்படடது. எனினும் 1996 உடன் ஒப்பிடுகையில் பெல்வத்தைத் தொழிற்சாலையின் சராசரி விளைச்சல் 1997 இல் 11 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வாண்டுக் காலத்தில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளின் விளைவாக மைய தோட்டங்களின் சராசரி விளைச்சல் அதிகரித்தமையானது பெல்வத்தையின் சராசரி விளைச்சல் அதிகரிக்க உதவியது. 1997 இல் இங்குரான, செவனகல தொழிற்சாலைகள் இரண்டினதும் சீனி பெறல் வீதம் 1996 உடன் ஒப்பிடுகையில் ஒவ்வொன்றும் 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. பெல்வத்தை தொழிற்சாலையில் சீனி பெறல் வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி 2 சதவீதமாக இருந்தது. பொதுவான சீனி பெறல் வீதம் 8.16 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

செவனகலவில் தனியாரின் கரும்பு கொள்வனவு மற்றைய இரு தொழிற்சாலைகளுடன் ஒப்பிடுகையில் சிறிய அளவாக இருந்தபோதும் 1996 இன் 1754 மெற்றிக் தொன்களிலிருந்து 1997 இல் 2437 மெற்றிக் தொன்களுக்கு 39 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. தனியார் துறையிடமிருந்து பெல்வத்தைத் தொழிற்சாலை கொள்வனவு செய்த கரும்பின் அளவு சிறிதளவால் அதிகரித்து 462,000 மெற்றிக் தொன்களை அடைந்தவேளையில் இங்குரான தொழிற்சாலை 26,000 மெற்றிக் தொன்களைக் கொண்டிருந்தது.

**அட்டவணை 3.7**

**சீனி உற்பத்தி மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | இங்குரானை சீனித் தொழிற்சாலை | | செவனகல சீனித் தொழிற்சாலை | | பெல்வத்தை சீனித் தொழிற்சாலை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1996 (அ) | 1997 (ஆ) | 1996 (அ) | 1997 (ஆ) | 1996 (அ) | 1997 (ஆ) | 1996 (அ) | 1997 (ஆ) |
| 1. கரும்பு பயிரிடப்பட்ட நிலப் பரப்பு (முளை தோன்றியதும்) (இ) | எக்டேயர்கள் | வி.கி.. | 1,673 | 3,282 | 3,147 | 6,056 | 4,872 | 8,510 (ஈ) | 9,692 |
| 2. அறுவடை செய்யப் பட்ட நிலப்பரப்பு(இ) | எக்டேயர்கள் | 1,329 | 934 | 2,699 | 2,377 | 4,927 | 3,831 | 8,955 | 7,142 |
| 3. அறுவடை செய்யப் பட்ட கரும்பு (இ) | மெ.தொன்கள் '000 | வி.கி | 69 | 176 | 169 | 188 | 161 | 363 (ஈ) | 398 |
| 4. தனியாரிடமிருந்து கொள் வனவு செய்யப்பட்ட கரும்பு | மெ.தொன்கள் '000 | வி.கி. | 26 | 2 | 2 | 453 | 462 | 455 (ஈ) | 491 |
| 5. பிழியப்பட்ட கரும்பின் அளவு | மெ.தொன்கள் '000 | 170 | 95 | 178 | 169 | 515 | 520 | 862 | 783 |
| 6. சராசரி விளைச்சல்(இ) | மெ.தொன்கள்/ எக்டே. | வி.கி. | 73 | 65 | 70 | 37 | 41 | 48 (ஈ) | 53 (ஈ) |
| 7. சீனி உற்பத்தி (கூட்டப்பட்டவை தவிர்ந்த) | மெ.தொன்கள் '000 | 11 | 6 | 16 | 15 | 44 | 43 | 70 | 64 |
| 8. சீனி பெறப்பட்ட வீதம் (உ) | % | 6.39 | 6.20 | 9.02 | 8.76 | 8.46 | 8.32 | 8.17 | 8.16 |


(அ திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) முதன்மைத் தோட்டங்களையும் ஒதுக்கீட்டாளர்களையும் உள்ளடக்கும்.
(ஈ) இங்குரான சீனித் தொழிற்காலையின் தரவுகள் நீங்கலாக.

$$(உ)\ கரும்பு\ பிழிதல்\ வீதம் = \frac{உற்பத்தி\ செய்யப்பட்ட\ சீனி}{ஆலையிடப்பட்ட\ கரும்பின்\ அளவு} \times 100$$

மூலங்கள் : வரையறுக்கப்பட்ட பெல்வத்தை சீனிக் கைத்தொழில்கள்
வரையறுக்கப்பட்ட செவனகல சீனிக் கைத்தொழில்கள்
வரையறுக்கப்பட்ட இங்குரான சீனிக் கைத்தொழில்கள்

**வரைபடம் 3.5**

**மொத்த சீனிக் கிடைப்பனவு**




1997 இல், உள்நாட்டுச் சீனி உற்பத்தி நாட்டின் சீனி நுகர்வுத் தேவையில் ஏறத்தாள 10 சதவீதத்தினை மட்டுமே ஈடுசெய்யப் போதுமானதாக இருந்தது. ஒப்பிடுகையில் 1996 இல் இது 15 சதவீதத்தினை ஈடுசெய்தது. 1997 இல் இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவு 545,158 மெற்றிக் தொன்களாக அமைந்து 1996 இல் இறக்குமதி செய்யப்பட்ட 381,158 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 43 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. எனவே நாட்டில் சீனிக் கைத்தொழிலின் செயலாற்றம் எதிர்பார்ப்புகளுக்கு மிகக் கீழேயே இருப்பதுடன் ஆண்டுதோறும் மோசமடைந்தும் வருகின்றது. எனினும் கைத்தொழிலைப் பாதுகாப்பதற்காக இறக்குமதித் தீர்வை மிக உயர்ந்த மட்டத்திலேயே பேணப்பட்டுவருகின்றது. தற்போதைய இறக்குமதித் தீர்வை 1997 ஒகத்து 11இல் 18 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. சீனிக்கான இறக்குமதித் தீர்வையின் பொதுமட்டம் 35 சதவீதமாக இருக்கிறது. நுகர்வோர் மீதான சுமையைக் குறைப்பதற்காக 10 சதவீத தீர்வைக் குறைப்புக் காணப்பட்டது. 1997 நவெம்பரில் முதலீட்டுச்சபை ஒழுங்குவிதிகளின் கீழ் மொனராகலை மாவட்டத்திலுள்ள சியம்பலாண்டுவவில் நாளொன்றுக்கு 1250 தொன் கரும்பினை பிழியக்கூடிய இயலளவுடன் புதிய சீனித் தொழிற்சாலையொன்று நிறுவப்பட்டதுடன் இந்த இயலளவு நாளொன்றுக்கு 2000 மெற்றிக் தொன்னை பிழியக் கூடியளவிற்கு மேலும் விரிவாக்கப்படும்.

## 3.5 மீனும் கால்நடையும்

### மீன்

1997 இல் மொத்த மீன் உற்பத்தி 5 சதவீதத்தினால் அதிகரிப்பதோடு 240,000 மெற்றிக் தொன்களாக இருக்குமென கடற்றொழில் நீர்வாழ் உயிரின மூலவள அபிவிருத்தி அமைச்சு தற்காலிகமாக மதிப்பிட்டிருந்தது. கடல் மீன் உற்பத்தி (கரையோர, ஆழ்கடல், கரைகடந்த) 212,750 மெற்றிக் தொன்களுக்கு பங்களிப்புச் செய்ததோடு இது 1996ஆம் ஆண்டைவிட 3 சதவீத அதிகரிப்பை காட்டுகின்றது. பாதுகாப்புக் காரணங்களினால் முன்னர் மீன்பிடித்தல் தடைசெய்யப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் சில பகுதிகளில் மீன்பிடித்தலை மீண்டும் தொடங்கியமை கடல் மீன் உற்பத்தி அதிகரிப்பிற்கு உதவின. ஆழ்கடல் மீன்பிடித்தலில் பல நாள் படகுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமையும் உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவியது.

**அட்டவணை 3.8**

**மீன் உற்பத்தி**

மெற்றிக் தொன் 000

| துணைத்துறை | 1995 | 1996(அ) | 1997(ஆ) |
|---|---|---|---|
| கடல் (இ) | 218 | 206 | 213 |
| அலங்கார மீன் வளர்ப்பு (ஈ) | 20 | 22 | 27 |
| மொத்தம் | 238 | 228 | 240 |

மூலங்கள் : கடற்றொழில் நீர்வாழ் மூல வளங்கள் அபிவிருத்தி அமைச்சு

(அ திருத்தப்பட்டது.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) கரையோர மற்றும் ஆழ்கடல்.

(ஈ) உள்ளூர்த் துறை கரையோர உப்புநீர் இறால் மற்றும் இறால் பண்ணை உற்பத்திகளை உள்ளடக்குகின்றது.

1997 காலப்பகுதியில் நன்னீர் மீன் உற்பத்தி (உள்ளூர், கரையோர,மித உப்புத் தண்ணீர் இறால் வளர்ப்பு, இறால் பண்ணை) 22 சதவீத குறிப்பிடத்தக்க முனனேற்றத்தை காட்டியதோடு 27,250 மெற்றிக் தொன்களை பதிவு செய்தது. நீர்த் தேக்கங்களுக்கு இறால் குஞ்சுகள் அதிகளவில் விடுவிக்கப்பட்டமை, சாதகமான மழை வீழ்ச்சி பரம்பலினால் வாவிகளில் போதியளவு நீர் இருந்தமை, சிறந்த முகாமைத்துவம், ஒருங்கிணைப்பு புரிந்துணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன உள்நாட்டு மீன்பிடித்துறையின் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணங்களாகும். ஆண்டுக் காலப்பகுதியில் கடற்றொழில் நீர்வாழ் உயிரின மூலவள அபிவிருத்தி அமைச்சு, தம்புள்ளை, உடவளவை, இங்கினியாகலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள உள்நாட்டு மீன்பிடி அபிவிருத்தி நிலையங்களில் புனரமைப்பு வேலைகளை தொடர்ந்தது. 1996 செத்தெம்பரில் இங்கினியாகலை உள்ளூர் மீன்பிடி நிலையம் தனியாரிடமிருந்து பொறுப்பேற்கப்பட்டதோடு அதன் பழுதுபார்ப்பு

வேலைகள் 1997 இல் மீன்பிடி நீர்வாழ் உயிரின மூலவள அபிவிருத்தி அமைச்சினால் தொடக்கி வைக்கப்பட்டது. வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள இறால் பண்ணைகளில் உள்ள இறால்களை பீடித்திருந்த வெள்ளை புள்ளி நோய் 1996 இன் மூன்றாம் காலாண்டில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அது 1996 திசெம்பர் நடுப்பகுதியில் மீண்டும் பரவத் தொடங்கியது. இது 1997 இன் இறால் உற்பத்தியில் எதிர்க்கணிய விளைவாக காணப்பட்டதோடு கிட்டத் தட்ட 90 சதவீதமான பண்ணைகள் செயற் படாத நிலைக்கு காரணமாகியது. ஏறக்குறைய 900 இறால் பண்ணைகள் 3,000 எக்டேயர் பிரதேசத்தை உள்ளடக்கி காணப்பட்டன. இறால் தொழிற்பாட்டாளர்களில் பெரும்பான்மையானோர் ஒரு எக்டேயருக்கும் குறைவான பிரதேசத்தை உள்ளடக்கிய சிறியதுறை முயற்சியாளர்களாகும். நிதி மூலவளப் பற்றாக்குறை காரணமாக பெரும்பாலான பண்ணை தொழிற்பாட்டாளர்கள் கடனை மீளச் செலுத்த முடியாதவர்களாகவோ அல்லது நிவாரண நடவடிக்கைகளை எடுக்க முடியாதவர்களாகவோ காணப்பட்டதோடு அரசாங்க ஆதரவும் தேவைப் படுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட பண்ணைகளை மாற்றியமைப்பதற்கான நிதி உதவிகள் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக வழங்கப்பட்டது. இதன் மூலம் நோய் பரவுவதை தடுப்பதற்கான படுகைபாறை நீர்த்தேக்கங்களை கட்டுவதற்கும் (சிறிய பண்ணைகளுக்காக) மற்றும் மீள் சுழற்சி முறைகளை (பெரிய பண்ணைகளுக்காக) அமைப்பதற்கும் இயலுமானதாக இருந்தது. இதற்கு மேலதிகமாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் நோய் கண்டுபிடிக்கும் திறனை அதிகரிப்பதற்காகவும் மற்றும் ஆராய்ச்சி அலுவலர்களையும் விஞ்ஞானிகளையும் பயிற்றுவிப்பதற்காகவும் உணவு, விவசாய தாபனத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமாக உதவியளிக்கப்பட்டது. நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தல் சம்பந்தமாகவும் பண்ணைத் தொழிற்பாட்டாளர்களுக்கு பயிற்சியளிக்கப் பட்டது. இறால் தொழிற்பாட்டாளர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் அமைப்பு வல்லுநர்களையும் மதியுரை வழங்குபவர்களையும் இப் பயிற்சித் திட்டங்களுக்காக கொடுத்துதவியது.

தனியார்துறையினர் மீன்பிடித்துறையில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனம் அதன் நாடளாவிய ரீதியில் உள்ள விற்பனைக் கூடங்களின் ஊடாக பாவனையாளர்களுக்கு நியாயமான விலையில் மீனினை வழங்குவதில் ஈடுபட்டுவருகின்றது. 1997 இல் இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மொத்த மீன் வழங்கல் 2,144 மெற்றிக் தொன்களோடு இது 3 சதவீத அதிகரிப்பாகும். இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனம் மீன்பிடித்துறைக்கான உறைநீர்க் கட்டிகளின் தயாரிப்பிலும் ஈடுபட்டிருந்தது. 1997 இல் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் உறைநீர்க்கட்டி உற்பத்தி 2 சதவீதத்தினால் அதிகரித்ததோடு 6947 மெற்றிக் தொன்களாகவும் அமைந்தது.

மீன்பிடித்துறையின் அதி உயர் மூலதன செறிவுத் தன்மையை கருத்திற் கொண்டு மீன்பிடி படகுத் தொகுதிகள், மீன்பிடிக் கருவிகளின் தொகுதிகள் என்பவற்றை நவீனப்படுத்துவதில் எதிர்நோக்குகின்ற கட்டுப்பாடுகளை எதிர்கொள்ளுவதற்கு கடற்றொழில் நீர்வாழ் உயிரின மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு மீன்பிடித்துறைக்கு பல்வேறு உதவிக் கொடுப்பனவுகளை தொடர்ந்தும் வழங்கியது. 202 நாட் படகுகள், 53 பல்நாள் படகுகள், மற்றும் 405 மரபுவழிக்கலன்கள் என்பன வற்றுடன் ஒப்பிடுகையில் 1997 இல் உற்பத்தியாளர் உதவிக் கொடுப்பனவுத் திட்டங்களின் கீழ் 55 நாள் படகுகள், 52 பல்நாள் படகுகள் மற்றும் 383 மரபுவழிக் கலன்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த சில ஆண்டுகளாக வடக்கு, கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் மீன் பிடித்தல் தடைசெய்யப்பட்டிருந்ததன் விளைவாக தெற்கு மற்றும் மேற்குக் கடல்களில் கரையோர மீன்பிடி வளங்களை அதிகூடிய அளவில் பயன்படுத்தலை ஊக்கமிழக்கச் செய்தமை ஒரு நாட் படகுகளின் வழங்களின் வீழ்ச்சிக்கு காரணமாயிற்று, ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கு கூடிய ஊக்குவிப்பு வழங்கப்பட்டது. பல்நாட் படகுகள் ஆழ்கடலில் ஏறக்குறைய 15 நாட்களுக்கு தரித்து நிற்கக்கூடிய வல்லமை பெற்றிருப்பதனால் இதன் மூலம் மீன்பிடித்தலானது உற்பத்தி இயலளவு அதிகரிப்பிற்கு காரணமாகும். நன்னீர் மீன்பிடித் துறைக்கு வழங்கப்பட்ட உதவிக் கொடுப்பனவு 33 சதவீதத்தினால் அதிகரித்ததோடு ரூ. 4 மில்லியனாக இருக்கையில் கடல் மீன்பிடித்துறைக்கு வழங்கப்பட்ட உதவிக் கொடுப்பனவு 19 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ரூ.65 மில்லியனாகக் காணப்பட்டது. நன்னீர் மீன்பிடித்துறையானது தூரப் பிரதேசங்களில் உள்ள கிராமங்களின் மீனுக்கான கேள்வியை சமாளிக்கக்கூடியதும், ஏற்றுமதிச் சந்தைக்கான உற்பத்திகளை வழங்கக் கூடியதுமான உள்ளார்ந்த ஆற்றலை கொண்டுள்ளது. 1996 இல் ஆரம்பிக்கப் பட்ட மீன்பிடிக் கூட்டுறவுச்சங்கங்களின் மறுசீரமைப்பானது 1997 இல் 746 மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டு காணப்பட்டது. மீன்பிடி

கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 77,656 ஆக இருந்தது. எவ்வாறாயினும் மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதில் அரசின் தலையீடு, சுய ஆதார மக்கள் அமைப்பு என்ற வகையில் அவற்றின் அபிவிருத்திக்கு தடையாக இருந்ததை கடந்தகால அனுபவங்கள் காட்டுகின்றது.அரச உதவிகள் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

1997 இல் அனைத்து வகை மீன்களினதும் சராசரி உற்பத்தியாளர் விலை 10 சதவீதத்தினால் அதிகரித்ததோடு கிலோக்கிறாம் ஒன்றிற்கான விலை ரூபா 110 ஆக காணப்பட்டது. அனைத்துவகை மீன்களினதும் சராசரி சில்லறை விலை 1996 இல் பதிவு செய்யப்பட்ட ரூ. 143 லிருந்து 1997 இல் 8 சதவீத அதிகரிப்பைக் காட்டி ரூ. 154 ஆக அமைந்தது. "அறுக்குலா " (பெரிய வகையொன்று) வின் அதி உயர் சில்லறை விலை கிலோக் கிறாம் ஒன்றுக்கு ரூ. 297 ஆக பதியப்பட்டிருக்கையில் "சாளையா " (சிறிய வகையொன்று) வின் மிகக் குறைந்த சராசரி சில்லறை விலை ரூ. 65 ஆக பதியப்பட்டிருந்தது. குடித்தொகையின் பிரதான புரதச்சத்து மூலமான மீனுக்கான கேள்வி அதிகரித் தலை சமாளிக்கும் முகமாக 1997 இல் மொத்த மீன் இறக்குமதி 18 சதவீதத்தினால் அதிகரித்து 73,950 மெற்றிக் தொன்களாக அமைந்தது. தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் இறக்குமதி குறிப்பிடத்தக்க விதத்தில் 21,925 மெற்றிக் தொன்களுக்கு 44 சதவீதத்தினால் அதிகரித்ததோடு உப்பிடப்பட்ட மீன் (கருவாடு) இறக்குமதி 48,782 மெற்றிக் தொன்களுக்கு 11 சதவீதத்தினால் அதிகரித்தது.

கடந்த காலங்களில் ஏற்றுமதி செய்யப்பட்ட மிக முக்கிய மீனின வகையாக இறால் அமைந்தது. எப்படியாயினும் அண்மைய ஆண்டுகளில் உடன் மற்றும் உறையவைக்கப்பட்ட மீன் ஏற்றுமதியானது 1996இல் பதியப்பட்ட 2494 மெற்றிக் தொன்களில் இருந்து 1997 இல் 3251 மெற்றிக் தொன்களுக்கு 30 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனத் தினால் முகாமை செய்யப்படுகின்ற துறைமுகங்க ளில் தரித்திருந்த வெளிநாட்டுக் கலங்களின் ஊடாக மீன் ஏற்றுமதி செய்யப்பட்டமையே இதற்குப் பிரதான காரணமாகும். இலங்கையின் தனிப்பட்ட பொருளாதார வலயத்திற்கு வெளியே மீன் பிடித்தலில் ஈடுபட்டுள்ள இக் கலன்கள் முதலீட்டுச் சபையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக இலங்கையில் கூட்டுத் தொழில் முயற்சிகளை நிறுவியுள்ளன. மாறாக இறால் ஏற்றுமதி 1997 இல் 2584 மெற்றிக் தொன்களுக்கு 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பிரதான காரணமாக வெள்ளைப் புள்ளி நோயின் விளைவாக உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையைக் குறிப்பிடலாம். எவ்வாறாயினும் வெளிநாட்டுச் சந்தைகளில் கிடைத்த சாதகமான விலையின் காரணமாக இறால் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருவாய் 7 சதவீதத்தினால் மட்டுமே வீழ்ச்சியடைந்தது. கடுமையான தரக்கட்டுப் பாடுகளை வழியுறுத்தியபோதிலும் இறக்குமதி நாடுகளான யப்பான், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கு இறால் ஏற்றுமதிக் கான உள்ளார்ந்த வளம் காணப்படுகின்றது. மீன்பிடித் துறைமுகங்களையும் மீன் பதனிடும் நிறுவனங்களில் மீன் பதனிடுதலின் தரம், பாது காப்பு, என்பவற்றை முன்னேற்றும் நடவடிக்கை களை கடற்றொழில் நீர்வாழ் உயிரின மூலவள அபிவிருத்தி அமைச்சு எடுத்து வருகின்றது.

### கால்நடை

கால்நடை கைத்தொழில்துறை பல துணைத் துறைகளைக் கொண்டிருந்தபோதிலும், பாற் பண்ணை மற்றும் கோழிப்பண்ணை கைத்தொழில் கள் தற்போது மிக முனைப்பானதும், நன்கமைந்தது மான துறைகளாகும். கால்நடைத்துறையானது மொத்த விவசாய உற்பத்திப் பெறுமதியில் 8 சதவீதத்திற்குப் பங்களிப்பு செய்ததோடு இதில் தனியார் துறையின் செல்வாக்கு கூடுதலாகக் காணப்பட்டது. கால்நடைத்துறையின் மொத்த உற்பத்தியில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை ஏறக்குறைய 2 சதவீத சிறிய பங்களிப்பை 1997 இலும் தொடர்ந்தது.

தொகை மதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்க ளத்தின் மதிப்பீட்டின்படி தேசிய பசும்பால் உற்பத்தி 1996 இன் 249 மில்லியன் இலீற்றர்களில் இருந்து 1997 இல் 252 மில்லியன் இலீற்றர்களுக்கு கிட்டத்தட்ட 1 சதவீதத்தினால் அதிகரித்தது. மாறாக 1997 இல் எருமைப்பால் உற்பத்தி 4 சதவீதத்தினால் 79 மில்லியன் இலீற்றர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் பசுப்பால் உற்பத்தி 1996 உடன் ஒப்பிடுகையில் 7 சதவீத வீழ்ச்சியைக் காட்டி ஏறக்குறைய 4.1 மில்லியன் இலீற்றராக அமைந்ததோடு எருமைப்பால் உற்பத்தி 1996 உடன் ஒப்பிடுகைளில் ஏறக்குறைய 7.4 மில்லியன் இலீற்றர்களுக்கு 8 சதவீதத்தால் அதிகரித்தது.

நாட்டின் பாரிய பால் சேகரிப்பாளரான வரையறுக்கப்பட்ட மில்க் இன்டஸ்ரீஸ் ஒவ் லங்கா நிறுவனம் 1997 இல் தேசிய பால் சேகரிப்பில் 50

சதவீதத்திற்கு வகை கூறியதோடு அது 57.5 மில்லியன் இலீற்றர்களாகும். முன்னைய ஆண்டுகளின் சேகரிப்பான 54 மில்லியன் இலீற்றரைவிட இது 6.0 சதவீத அதிகரிப்பாகும். 1996 இலிருந்து ஒரு இலீற்றருக்கு ரூ.12.64 கொண்ட சிறந்த விலையொன்று உற்பத்தியாளர்களுக்கு வழங்கப் பட்டமையும், 1997 இல் பெறப்பட்ட சிறந்த மழை வீழ்ச்சி பரம்பலினால் பெறப்பட்ட சாத்தியமான காலநிலை பசும்புல் அல்லது விலங்குத்தீன் வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தமையும் இவ்வதிகரிப்புக்கான காரணமாகும்.. வரையறுக்கப்பட்ட நெஸ்லே லங்கா நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்ட பாலின் அளவு 1996இன் 36.8 மில்லியன் இலீற்றர்களிலிருந்து 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 1997 இல் 35.1 மில்லியன் இலீற்றர்களாக இருந்த வேளையில் வரையறுக்கப்பட்ட இன்டர் நசனல் டெயிரி பிரடியூசர்ஸ் நிறுவனத்தினால் சேகரிக்கப் பட்ட பாலின் அளவு அதே காலத்தில் 24 சதவீதத்தினால் வீழ்ச்சியைடந்தது. 1997இல் ஏனைய பால் பதனிடும் கைத்தொழிலாளர்களின் சேகரிப்பு 12 மில்லியன் இலீற்றருக்கு, 4 மடங்குக்கும் மேலாக அதிகரித்தது.

1997இல் வரையறுக்கப்பட்ட மில்க் இன்டஸ்ரீஸ் ஒப் லங்கா நிறவனத்தின் பால் உற்பத்திகளின் கூட்டிய பெறுமதி அதிகரித்தது. இதன் பயனாக பொங்கவைத்து குளிரப்பட்ட பாலின் உற்பத்தி 2 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்த வேளையில் சுவையூட்டப்பட்ட பால் 17 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வொவ்வொரு உற்பத்திப் பொருட்களுக்கு இன்னமும் பாரிய கேள்வி இருந்த போதிலும் முழு ஆடை மற்றும் சுவையூட்டப்பட்ட கிருமி நீக்கிய பால் என்பவற்றின் உற்பத்தி 17 சதவீதத்தினால் அதிகரித்தது. 1997 இல் யோகட் மற்றும் குடிக்கும் யோகட் போன்ற பால் உற்பத்திகள் 10 சதவீதத்தினால் அதிகரித்ததோடு பதனிடப் பட்டபால் கட்டி உற்பத்தி 22,000 கிலோ கிறாம்களுக்கு 2 மடங்கிற்கும் மேலாக அதிகரித்தது. வரையறுக்கப்பட்ட மில்க் இன்டஸ்ரீஸ் ஒப் லங்கா நிறுவனத்தின் முழு ஆடைப்பால் உற்பத்தி 4.5 மில்லியன் கிலோக் கிறாமிற்கு கிட்டத்தட்ட 10 சதவீதத்தினால் அதிகரித்தது. வரையறுக்கப்பட்ட லங்கா நெஸ்லே நிறுவனத்தின் பால் உற்பத்திப் பொருட்களின் வெளியீடு 1996 இன் 6000 மெற்றிக் தொன்களி லிருந்து 1997 இல் 5,600 மெற்றிக் தொன்களுக்கு கிட்டத்தட்ட 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1996 இல் இருந்து முன்னால் கொண்டுவரப்பட்ட பாரிய கையிருப்புக்களை பாவித்தமையே இதற்குக் காாரணமாகவிருந்தது.

நாட்டின் பால் மற்றும் பால் உற்பத்திகளுக்கான தேவைப்பாடுகளில் 1997 இன் பால் உற்பத்தி கிட்டத்தட்ட 20 சதவீதத்தில் இருந்தது. பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களில் நாடு சுயபூர்த்திக்கான உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருப்பதோடு பால் உற்பத்தியை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இலங்கை அரசாங்கத்தினதும் இந்தியாவின் தேசிய பாற்பண்ணை அபிவிருத்திச் சபையினதும் கூட்டுத் தொழில் முயற்சியான வரையறுக்கப்பட்ட கிரிய மில்க் இன்டஸ்ரீஸ் ஒப் லங்கா நிறுவனத்திற்கு உடமை உரிமையை கையளிப்பது சம்பந்தமான தொடக்க வேலைகள் 30 செத்தெம்பர் 1997 இல் ஆரம்பிக்கப்பட்டது.

பாரிய எண்ணிக்கையிலான சிறிய உற்பத்தியாளர்களையும் பாரிய உற்பத்தியாளர் சிலரையும் உள்ளடக்கிய தனியார்துறையினர் கோழிப்பண்ணை கைத்தொழிலில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். கோழித்தீன் உற்பத்தியாளர்கள் மற்றும் கோழிப் பண்ணைப் பொருட்களின் உற்பத்தியாளர்களின் இணைப்பினைக் கொண்ட கலப்பான பண்பினையும் இது கொண்டிருக்கிறது. தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தின் தகவல்களின்படி நாட்டின் முட்டை உற்பத்தி 1996 இன் 856 மில்லியனிலிருந்து 1997 இல் 855 மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. 1997 இன் நடுப்பகுதியில் கோழிக் குஞ்சுகளுக்கு ஏற்பட்ட தொற்று நோயே இதற்குப் பிரதான காரணமாக விருந்தது. தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையின் பண்ணைகளினது முட்டை உற்பத்தி 1996 இனைவிட கிட்டத்தட்ட 52 சதவீதம் வீழ்ச்சியடைந்து 1997 இல் ஏறக்குறைய 4 மில்லியனாக இருந்தது. 1997 இல் 3ம் காலாண்டில் மீன் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக முட்டைக்கான கேள்வி அதிகரித்தமையும், முட்டை வழங்கலில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாகவும் முட்டை விலைகள் கூர்மையாக அதிகரித்தது. பருவகால கேள்வி அதிகரித்தமையும் மற்றும் நீர்கொழும்பு மீன் பிடிப் பிரதேசங்களில் கொலரா பரவியதன் காரணமாக மீனினைவிட முட்டைக்கான கேள்வி அதிகரித்தமையும் முட்டை விலை ஆண்டு முடியும்வரை உயர்நிலையிலேயே தொடர்ந்திருப் பதற்கு காரணமாகியது. முட்டைகளுக்கு கிடைத்த சாத்தியமான விலைகள், கோழிப்பண்ணையாளர்களின் உற்பத்தி அதிகரிப்பினை ஊக்கப் படுத்தியதோடு இது 1998 இல் ஒரு தாக்கத்தினைக் கொண்டிருக்கும். ஒரு முட்டைக்கான உற்பத்திச் செலவு கிட்டத்தட்ட ரூ. 3.50 ஆக மதிப்பிடப்

பட்டிருந்தது. கால்நடை அபிவிருத்தி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் தகவலின்படி 1997 இல் கோழி உற்பத்தி ஏறக்குறைய 40,000 மெற்றிக் தொன்களாக இருப்பதோடு இது 1996இன் உற்பத்தியைவிட 5 மடங்குக்கு மேலான அதிகரிப்பாகும். விலங்குப் புரதப் பொருட்களின் பிரதியீடான மீன் மற்றும் ஆட்டிறைச்சி போன்றவற்றின் விலை அதிகரித்தமையும் கவர்ச்சியான விலைகள் மற்றும் இறைச்சிக்காக கோழியின் கேள்வி அதிகரித்தமை போன்றன கோழிப்பண்ணை உற்பத்திகளுக்கு சிறந்த சந்தை வாய்ப்பினை பெற்றுக் கொடுத்தன. 1996 திசெம்பரில் இறைச்சிக் கோழிக்கான சராசரி சில்லறை விலை கிலோக் கிறாம் ஒன்றுக்கு ரூ. 113 ஆக இருந்ததோடு 1997 திசெம்பரில் கிலோக் கிறாம் ஒன்றுக்கு ரூ. 140 ஆக 24 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

விலங்கு உணவுகளுக்கு பாவிக்கப்பட்ட மூலப் பொருட்களின் பன்னாட்டு விலைகள் வீழ்ச்சியடைந்தமை விலங்குத் தீனின் விலையை 1997 பூராகவும் ஓரளவு உறுதித்தன்மையுடன் வைத்திருப்பதற்கு இயலச் செய்தது. ஓரளவு உறுதித்தன்மையான இறக்குமதி விலைகளுடன் இணைந்து கவர்ச்சியான வெளியீட்டு விலைகள் கால்நடை கைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு சாதகமான சூழ்நிலையொன்றினை உருவாக்கியதோடு நாட்டின் கோழிப் பண்ணை சந்தை 1996 இன் இருந்த தேக்க நிலையில் இருந்து மீட்சி பெற்றது.

## 3.6 உள்ளீடுகளும் கொடுகடனும்

வேளாண்மையாளர்களின் பண்ணை வருமானம் தொடர்பான அவர்களின் எதிர்பார்ப்புக்கள் உள்ளீடுகளின் விலைகளில் ஏற்படும் அசைவுகளின் செல்வாக்கிற்கு பெருமளவு உட்படுகின்றன. உள்ளீட்டின் விலைகளில் ஏற்படும் எந்த ஒரு அதிகரிப்பும் இறுதி உற்பத்தியின் விலைகளில் மேற்கொள்ளப்படும் நேரிணையான அதிகரிப்பின் மூலம் பொதுவாக இழப்பீடு செய்யப்பட வேண்டும். ஆனால் இது எப்பொழுதும் சாத்தியமானதல்ல. ஏற்கனவே காணப்பட்ட கவர்ச்சிகரமான உற்பத்தியாளர் விலைகள் சரியான நேரத்தில் உள்ளீடுகள் பொருத்தமாகப் பயன்படுத்தப்படுவதற்குத் தூண்டுதலாக அமைந்ததையும் அவதானிக்க முடிந்தது.

### வளமாக்கி

1997 கலண்டர் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட வளமாக்கி 524,558 மெற்றிக் தொன்களுக்கு சிறிதளவில் அதிகரித்தது. எனினும் பெருந்தோட்டப் பயிர்களில் தேயிலை மட்டுமே வளமாக்கிப் பாவனையில் அதிகரிப்பினைப் பதிவு செய்தது. ஆண்டு முழுவதும் தேயிலைக்கு நிலவிய மேம்பட்ட விலை, சாதகமான வானிலை நிலைமைகள் என்பன வளமாக்கிப் பாவனை 4 சதவீதத்தினால் அதிகரிக்க உதவின. இறப்பர் மற்றும் தெங்குத் துறைகளுக்கான வளமாக்கி வழங்கல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 28 சதவீதத்தினாலும், 11 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. 1997 இல் அறிவிக்கப்பட்டவாறு இறப்பர் துறையில் வளமாக்கிப் பாவனையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்கதொரு குறைப்பிற்கு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் காரணமாக இருக்க முடியும். தெங்குத் துறைக்கான வளமாக்கி வழங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு அமோனியம் சல்பேட்டின் மீதான உதவிக் கொடுப்பனவு அகற்றப்பட்டதன் பின்னர் விலைகள் உயர்ந்ததன் விளைவாக அமோனியம் சல்பேட்டின் பயன்பாடு குறைவடைந்தமை காரணமாக இருக்கலாம். கலண்டர் ஆண்டு அடிப்படையில், நெல் துறையில் வளமாக்கிப் பயன்பாடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3 சதவீதத்தினால் அதிகரித்தது. நெல் துறையில் காணப்பட்ட அதிகரித்த வளமாக்கிப் பயன்பாட்டிற்கு 1997/98 பெரும் போகத்தில் உறுதிப்படுத்தப்பட்ட நீர்ப்பாசன நீர்வழங்கலும் காரணமாகும். ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்த்துறைக்கான வளமாக்கி வழங்கல்களும் 14 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தமைக்கு உற்பத்தியாளர் விலைகளில் ஏற்பட்ட பொதுவான மேம்பாடு வளமாக்கிப் பாவனையை கூட்டுவித்தமையே காரணமாகும்.

யூறியா, அமோனியம் சல்பேட், பொட்டாசியம் மியூறியேட், மற்றும் முக்கூட்டு சுப்பர்பொசுப்பேட் ஆகிய நான்கு முக்கிய வளமாக்கி வகைகள் தொடர்பான வளமாக்கி உதவிக் கொடுப்பனவுத்திட்டம்

**அட்டவணை 3.9**

பயிர்களின் படியான வளமாக்கிப் பயன்பாடு

'000மெற்றிக் தொன்கள்

| பயிர் | 1995 | 1996(அ) | 1997(ஆ) |
|---|---|---|---|
| நெல் | 257 | 238 | 245 |
| தேயிலை | 120 | 154 | 160 |
| இறப்பர் | 15 | 17 | 12 |
| தெங்கு | 34 | 39 | 35 |
| ஏனைய களப்பயிர்கள் | 40 | 55 | 49 |
| ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள் | 5 | 6 | 7 |
| ஏனையவை | 39 | 16 | 17 |
| மொத்தம் | 509 | 524 | 525 |

மூலம் : தேசிய வளமாக்கிச் செயலகம்


(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை

1997 செத்தெம்பர் இறுதிவரை தொடர்ந்தது. எனினும், 1997 ஒத்தோபரிலிருந்து இத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டது. புதிய திட்டத்தின் கீழ், வளமாக்கி உதவிக் கொடுப்பனவு யூறியா வளமாக்கிக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இத் திருத்தத்தின் முக்கிய குறிக்கோள் சிறு வேளாண்மையாளர்களுக்கு உயர்ந்தளவு நன்மைகளை வழங்குவதேயாகும். நாட்டில் பயன்படுத்தப்பட்ட யூறியா வளமாக்கியில் ஏறத்தாள 75 சதவீதம் நெற்பயிர்ச் செய்கைக்கானதாகவே இருந்தது. திருத்தப்பட்ட திட்டத்தின் கீழ் மெற்றிக் தொன் ஒன்றிற்கான சில்லறை விலை ரூ.7,000 ஆக அல்லது 50 கி.கிறாம் பையின் விலை ரூ.350 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இப்புதிய திட்டம் பருவகால அடிப்படையிலான திருத்தங்களுக்கு உட்பட்டதாகும்.

**வரைபடம் 3.6**

**வளமாக்கிப் பயன்பாடு : முக்கிய பயிர் வகைகளின்படி**

**(1990 = 100)**




## விதை

தேசிய விதைக் கொள்கை (விதை மற்றும் பயிரிடல் பொருள்கள் கைத்தொழில் மீதான இலங்கை அரசின் கொள்கை) 1997 இல் அலுவலசார் முறையில் பிரகடனம் செய்யப்பட்டது. நாட்டிற்குத் தேவையான தரமான விதைகளையும் பயிரிடல் பொருட்களையும் உற்பத்தி செய்வதில் தனியார்துறையின் பங்களிப்பினை ஊக்குவிப்பதற்கான வழிகாட்டல்களை ஆவணம் வழங்கியது. இது, இலங்கைப் பயிர்ச் செய்கைச் சமூகம் உள்நாட்டு மூலங்களிலிருந்து அல்லது இறக்குமதிகளினூடாக சிறந்த தர விதைகளையும், பயிரிடல் பொருட்களையும் இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை வழங்குவதற்காக ஆற்றல் வாய்ந்த விதைக் கைத்தொழிலை நிறுவுவதற்கு எதிர்பார்க்கிறது. ஆகவே புதிய கொள்கையானது விதைகளையும் பயிரிடல் பொருட்களையும் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் விதை தொழில் முயற்சிகளை உருவாக்கி நிறுவுவதில் கவனம் செலுத்தியது. வேளாண்மைத் திணைக்களம் தரமான விதைகளையும் பயிரிடல் பொருட்களையும் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆதரவினை ஒருங்கிணைத்து வழங்கும். இது தொடர்பாக, அரச மற்றும் தனியார்துறைகளுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள உள்ளடக்கம் மற்றும் வசதிகளைப் பற்றி விளக்குவதற்காக கொழும்பிலும் வெளியிடங்களிலும் பல செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

1997 நவெம்பரில், அரசு, 1998ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் தரமான விதைப் பொருட்களைப் போதுமானளவில் கிடைக்கச் செய்வதற்காக எடுக்கப்படவுள்ள பல்வேறு வழிமுறைகளையும் அறிவித்தது. வேளாண்மைத் திணைக்களம், இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை, வேளாண்மையாளர் மற்றும் தனியார்துறை தொழில் முயற்சியாளர் ஆகியோர் உள்நாட்டு உற்பத்தி மற்றும் இறக்குமதிகளினூடாக விதைத் தேவையை ஈடுசெய்யலாமென எதிர்பார்க்கின்றனர். விதை நெல்லைப் பொறுத்தவரை விதை உற்பத்தியை அதிகரிப்பதற்காக அம்பாறை, பொலனறுவை, குருநாகல், அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய 5 முக்கிய அரிசி உற்பத்தி மாவட்டங்களில் நெல் வேளாண்மையாளர்களிடையே ஐந்து ஏக்கர் விதைப் பண்ணை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. வேளாண்மைத் திணைக்களம் தரமான விதைகளையும், அதேபோன்று அவசியமான விரிவாக்கல் பணிகளையும் வழங்கும். வேளாண்மைத் திணைக்களத்தின் பெல்வெகற, பொலன்னறுவை, இங்குராங்கொட ஆகிய இடங்களிலுள்ள விதை உற்பத்திப் பண்ணைகள் உயர் விளைச்சல்தரும் விதைகளை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்துகின்றன. வேளாண்மை திணைக்களம் வர்த்தக ரீதியான விதை உற்பத்திகளுக்காக தனியார்துறைக்கு சில குறிப்பிட்ட விதைப்பண்ணைகளை நீண்டகாலக் குத்தகைக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கிறது. வேளாண்மைத் திணைக்களம் அதிகரித்த விளைச்சலை விளைவிக்கும் கள மட்டங்களின் பரிசோதனை, வளமாக்கிப் பயன்பாடு, தரமான விதைகளின் பயன்பாடு என்பனவற்றை மேம்படுத்துவதற்காக 5 மாவட்டங்களில் நடமாடும் வேளாண்மை தொழில்நுட்பப் பணிகளின் மூலம் அதன் விரிவாக்கல் பணிகளை உயர்த்துவதற்கு எதிர்பார்க்கிறது. வேளாண்மை விரிவாக்கப் பணிகளை வலுவாக்குவதற்காக, தமது உற்பத்தி இலக்குகளை அடைந்த அலுவலர்களுக்கு சன்மானங்களை வழங்குவதன் வாயிலாக செயலாற்ற ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

1997 நவெம்பரில் அரசாங்கம் விதை தூய்மைப் படுத்தும் பொறிகள், பிரித்து, தரமிடும் பொறிகள், விதை பரிசோதிக்கும் கருவிகள் மற்றும் விதை பொதியிலடைக்கும் பொறிகள் என்பன தீர்வையின்றி கிடைக்கச் செய்யப்படுமென மேலும் அறிவித்தது.

1997 இல் வேளாண்மைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விதை நெல்லின் அளவு 3,600 மெற்றிக் தொன்களுக்கு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. வேளாண்மைத் திணைக்களம் நாட்டின் விதை நெல் தேவையில் ஏறத்தாள 3 சதவீதத்தினை நிறைவு செய்யக் கூடியதாக இருந்த வேளையில் மிகுதி நெல் வேளாண்மையாளர், வேளாண்மையாளர் அமைப்புக்கள், கூட்டுறவுச் சங்கங்கள் தனியார் கம்பனிகள் , இலங்கை மகாவலி மேலாண்மைச்சபை மற்றும் மாகாண சபைகள் என்பனவற்றினால் ஈடுசெய்யப்பட்டன. இந் நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட விதை நெல்லின் பாகமொன்றே வேளாண்மைத் திணைக்களத்தில் உறுதிப்படுத்தப் பட்டது. வேளாண்மைத் திணைக்களத்தின் மிளகாய், உழுந்து, சோளம், நிலக்கடலை, போன்ற ஏனைய களப்பயிர்களின் விதை வழங்கல் 1997 இல் கணிசமாக அதிகரித்தது. ஏனைய களப்பயிர்களின் விதைத் தேவையில் பெரும் பங்கு வேளாண்மையாளர்களினால் ஈடுசெய்யப்பட்டது. எனினும் உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், என்பனவற்றின் விதைத் தேவை பெருமளவிற்கு இறக்குமதி செய்யப்படுகின்றது.

சிறு போகத்திலும் பெரும் போகத்திலும் பயிரிடப் பொருத்தமான வரட்சியைத் தாங்கக் கூடிய தட்டைப்பயறு வகை (தவள) இன்னுமொரு தட்டைப்பயறு வகை (சேன எனப் பெயர் கொண்டதெரிவு 107) முளையிலிருந்து உயர்விளைச்சலைத் தரும் கடலை வகை (பிறசடா) என்பன 1997 இல் வேளாண்மையாளர்களுக்காக, வேளாண்மைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட முக்கிய வகைகளாகும். மேலும் 1997இல் வரண்ட மற்றும் இடைநிலை வலயங்களுக்குப் பொருத்தமான இரண்டு வத்தாளை கிழங்கு வகைகளான சில வேர் கிழங்கு வகைகள், மற்றும் முகிழ் பயிர்கள் மற்றும் பப்பாளிபழ வகையொன்று (எம் 33 - பெயர் ரத்ன) என்பன வேளாண்மைத் திணைக்களத்தினால் பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்டன.

## வேளாண்மை இரசாயனங்கள்

பீடை நாசினிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட தற்காலிக மதிப்பீடுகளின்படி 1997 இல் விற்பனையான வேளாண்மை இரசாயனங்களின் மொத்த அளவு (பூச்சி கொல்லி, களை கொல்லி, பங்கசுக் கொல்லி) 1996 இன் தற்காலிக எண் தொகைகளுடன் ஒப்பிடுகையில் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மொத்த வேளாண்மை இரசாயன விற்பனையில் ஏறத்தாள 50 சதவீதத்திற்கு வகைகூறும் களைக் கொல்லியின் அளவு 2985 மெற்றிக் தொன்களுக்கு 6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், பூச்சி கொல்லிகளின் விற்பனை 2144 மெற்றிக் தொன்களுக்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பங்கசுக் கொல்லிகளின் விற்பனை அளவும் 579 மெற்றிக் தொன்களுக்கு 31 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

களைக் கொல்லிகளின் அதிகரித்த விற்பனைக்கு வேளாண்மையாளர்கள் இரசாயனக் களைக் கட்டுப்பாட்டு வழி முறைகளில் அதிகளவிற்கு தங்கியிருந்தமையே காரணமாகும். பூச்சி கொல்லிகளின் விற்பனை வீழ்ச்சியடைந்தமைக்கு ஒருங்கிணைக்கப்பட்ட அழிபிராணி முகாமைத்துவ முறைகள் (இம்முறையில் பூச்சி கொல்லிகளை நேரடியாகப் பயன்படுத்துவது ஊக்கமிழக்கச் செய்யப்பட்டு வருகிறது) ஊக்குவிக்கப்பட்டமையே காரணமாகும். 1997 நவெம்பரில் அரசு வேளாண்மை இரசாயன இறக்குமதிகள் மீதான சுங்கத் தீர்வை விலக்கலை அறிவித்தது.

## கொடுகடன்

வேளாண்மைத் துறையில் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றதும் முக்கியத்துவமளித்துக் காட்டப்படுவதுமான தாழ்ந்த உற்பத்தியாக்கத்திற்கு தேவையான உள்ளீடுகளைச் சரியான நேரத்தில் போதுமானளவிற்கும் பயன்படுத்தாமையே ஓரளவிற்குக் காரணமாகும். இவற்றைப் பொறுத்தவரை, கொடுகடன் கட்டுப்பாடு சிறப்பான கவனத்தை வேண்டிநிற்கும் முக்கியமானதொரு விடயமாகும். கிடைக்கத்தக்க தரவுகளின்படி முறைசாராத் துறையிலுள்ள வேளாண்மைக் கொடுகடனின் கேள்வியும் பயன்பாடும் குறைந்தளவு ஊக்கத்தையே வழங்குவதுபோல் தென்படுகின்றன.

1997இல் வர்த்தக வங்கிகள் அவர்களின் சொந்த நிதியிலிருந்து பயிர்ச்செய்கைக் கடன்களைத் தொடர்ந்தும் வழங்கிய வேளையில் ஆண்டிற்கு 7.5 சதவீதங்கொண்ட வட்டி உதவிக் கொடுப்பனவினை அரசு வழங்கியது. 1996/97 பயிர்ச்செய்கையாண்டில் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடனின் மொத்த அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதே அளவில்

ரூ. 586 மில்லியனாக காணப்பட்டது.

வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் ரூ.398 மில்லியன் தொகை கொண்ட அறுபத்தெட்டு சதவீதம் 1996/97 பெரும் போகத்தில் காணப்பட்ட வேளையில் மீதி ரூ. 188 மில்லியன் 1997 சிறுபோகத்தில் வழங்கப்பட்டது. 1996 இல் வழங்கப் பட்ட கடன்களுடன் ஒப்பிடுகைளில் சிறுபோகத்தில் வழங்கப்பட்ட கடன்கள் 33 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அதிகரித்த பயிர்ச்செய்கை நடவடிக்கைகளே காரணமாகும். முன்னைய ஆண்டினைப் போன்றே வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் ரூ. 383 மில்லியன் கொண்ட மூன்றில் இரண்டு பங்கு நெற்றுறைக்கும் மீதி ஏனைய களர்ப்பயிர்களுக்கும் வழங்கப்பட்டது. இரு அரச வங்கிகளான இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் மொத்தக் கடன் தொகையில் 68 சதவீதத்தினைப் பங்களித்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகைளில் இது ஏறத்தாள 10 சதவீதம் குறைவானதாகும். இவ்வாண்டில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் ரூ.89 மில்லியனுக்கு 11 சதவீதத்தினால் அதிகரித்தன.

## 3.7 காடாக்கல்

நீர் மூலவளங்கள், மண், விலங்குகள் மற்றும் தாவரங்களின் வாழ்க்கை மற்றும் சுற்றாடல் மாசுபடலைத் தணித்தல் போன்றவற்றின் ஆதாரத் திற்கும் பாதுகாப்பிற்கும் காடுகளும் காட்டு மூலவளங்களும், மிக இன்றியமையாதனவாக வுள்ளன. காட்டு மூலவளங்கள் விறகு, மரம் மற்றும் மருந்துவகை போன்ற பொருளாதாரத் தேவைகளையும் வழங்குகின்றன.

1992இல் வன வளத் திணைகக்களத்தினால் மேற் கொள்ளப்பட்ட அளவீட்டின் அடிப்படையில் காடுகளின் மொத்தப் பரப்பு ஏறத்தாள 2 மில்லியன் எக்டேயர்களை உள்ளடக்கியுள்ளது. சதுப்பு நில படர் காடுகளை உள்ளடக்கிய அடர்ந்த ஒளிபு காக்காடுகள் ஏறத்தாள 1.6 மில்லியன் எக்டேயர்கள் என மதிப்பிடப்பட்ட வேளையில் அடர்த்தியற்ற காடுகள் ஏறத்தாள 0.5 மில்லியன் எக்டேயர்களை உள்ளடக்கியிருந்தன. ஆற்றல் வாய்ந்த காடு வளர்ப்பு ஏறத்தாள 72,350 எக்டேயர்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது. 1997இல் மர வழங்கலுக்காக காட்டு வளர்ப்பிலிருந்து காடழிக்கப்பட்ட நிலப்பரப்பு (முழுமையாகத் தறிக்கப்பட்டவை) 205 எக்டேயர் களாக இருந்தன. இக் காலப்பகுதியில் வனவளத் திணைக்களத்தினால் இப் பிரதேசம் காடழிப்புச் செய்யப்பட்டது. காடழிப்பு நடவடிக்கைகள் சுற்றா டலில் ஏற்படுத்தும் எதிர்மறைத் தாக்கத்தினைக் குறைப்பதற்கும் சுற்றாடல் ரீதியில் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களைப் பாதுகாக்க வும் விறகு மற்றும் மரங்களுக்கான கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பினை வழங்குதற்காகவும் வனவளத் திணைக்களம் மீள்காடாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது.

1997 இல் பதிவு செய்யப்பட்ட காடுசார்ந்த வழக்குகளின் எண்ணிக்கை 1996 இல் பதிவு

**அட்டவணை 3.10**

காடாக்கல் துறை மீதான புள்ளி விபரங்கள்

| விடயம் | அலகு | 1995 | 1996(அ) | 1997(ஆ) |
|---|---|---|---|---|
| 1. மொத்த காட்டுத்தொகுதி உள்ளடக்கம்(இ) | '000 எக்டேயர்கள் | 2,119 | 2,119 | 2,119 |
| முடப்பட்ட காடுகள் (ஈ) | '000 எக்டேயர்கள் | 1,583 | 1,583 | 1,583 |
| பரந்த காடுகள் | '000 எக்டேயர்கள் | 464 | 464 | 464 |
| சதுப்பு நிலக் காடுகள் | '000 எக்டேயர்கள் | 9 | 9 | 9 |
| 2. காடு அழிக்கப்பட்ட நிலப்பரப்பு (உ) | '000 எக்டேயர்கள் | 100 | 300 | 205 |
| 3. மீள் காடாக்கப்பட்ட பரப்பு | '000 எக்டேயர்கள் | 10,307 | 13,167 | 205 (ஊ) |
| 4. பதிவு செய்யப்பட்ட காடு சார்ந்த குற்றங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 5,368 | 5,014 | 5,158 |
| கண்டுபிடிக்கப்பட்ட மரங்களின் அளவு | கன மீற்றர்கள் | 2,724 | 3,918 | 2,488 |
| கண்டுபிடிக்கப்பட்ட மரங்களின் பெறுமதி | மில். ரூ. | 29.3 | 35.7 | 29.5 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.

மூலம் : காட்டுத் திணைக்களம்

(ஆ) தற்காலிகமானவை.

(இ) கிட்டத்தட்ட 72,350 எக்டேயர்ளைக் கொண்ட வளம்மிக்க வளர்ப்பு காடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ஈ) சதுப்பு நிலக்காடுகள் உள்பட

(உ) மதிப்பீடுகள்

(ஊ) பங்கேற்பு காடாக்கல் செயற்றிட்டத்தில் உள்ளபரப்புக்கள் நீங்கலாக.

செய்யப்பட்ட 5014 இற்கு எதிராக 5158 ஆக விளங்கி 3 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. எனினும் கண்டுபிடிக்கப்பட்ட களவாக வெட்டப் பட்ட மரங்களின் அளவு 2488 கன மீற்றருக்கு 36 சதவீதத்தினால் வீழ்ச்சிடைந்த வேளையில் பெறுமதி ரூ. 30 மில்லியனுக்கு 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மரப் போக்குவரத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட அதிகரித்த கண்காணிப்பும் கடுமையான ஒழுங்கு விதிகளும் சட்டத்திற்கு முரணாக காடழிப்பின் மீது சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது.

1997 இல் சுற்றாடல் முகாமைத்துவத்தில் பல செயற்றிட்டங்கள் வனவளத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன. சிங்கராஜா, மற்றும் நக்கிள்ஸ் பாதுகாப்புச் செயற்றிட்டங்கள் நோர்வே அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து கிடைத்த ரூ.8 மில்லியன் வெளிநாட்டு உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன. நோர்வோ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் கண்டல் சதுப்பு நிலப்படர் காடுகளின் பாதுகாப்பு செயற்றிட்டத்திற்காக ரூ.1 மில்லியனை வழங்கியதுடன் இதில் 95 சதவீதம் பயன்படுத்தப்பட்டது. இச் செயற்றிட்டங்களின் கீழான நடவடிக்கைகள் பாதுகாப்புப் பிரதேச முகாமைத்துவம், தாங்கு வலய முகாமைத்துவம், சதுப்பு நிலப்படர் காடுகளின் வாழிடங்களின் அளவீடு, விரிவாக்கம், அறிவூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், கட்டடங்கள் மற்றும் வீதிகளின் நிருமாணம் மற்றும் பேணல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. ஆசிய அபிவிருத்தி வங்கியும், அவுத்திரேலிய உதவியும் பங்கேற்பு காடாக்கல் செயற்றிட்டத்திற்காக ரூ.115 மில்லியன் நிதியை வழங்கியதுடன் இதில் 95 சதவீதம் பயன்படுத்தப்பட்டது. இச் செயற்றிட்டத்தின் கீழ் 1997 இல் 9.3 மில்லியன் நாற்றுக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் வீட்டு வளாகங்களின் அபிவிருத்தியின் ஊடாக மரங்கள் வளர்க்கப்பட்டன. (7857 எக்டேயர்கள்) வேளாண்மை மரக் காணித்துண்டுகள் (2035 எக்டேயர்கள்) பாதுகாப்பு மரக் காணித்துண்டுகள் (1254 எக்டேயர்கள்) என்பனவற்றினூடாகவும் (696 எக்டேயர் நிலத்துண்டுகளிலும் 396 கி.மீற்றர் சாலையிலும் பயிரிடப்பட்டது.) பயிரிடல் அதிகரிக்கப்பட்டது. 1997 இல் மர மேம்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உணவு வேளாண்மை அமைப்பு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ரூ.100,000 இற்கு சமமான தொகையை வழங்கியது. இத் தொகை முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது.

வனவளத் திணைக்களத்தின் காட்டுத்துறை முதன்மைத் திட்டத்தின் அமைப்பிற்குட்பட்ட விதத்தில் எதிர்வரும் 5ஆண்டுகளுக்காக ஐந்தாண்டு நடைமுறைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டம் 7 முக்கிய கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

i. காட்டு நில ஒதுக்கலும் பேரண்ட மட்ட வலையமாக்கலும்

ii. காட்டுப் பாதுகாப்பு முகாமைத்துவம்

iii. இயற்கைக் காடுகளின் பல்பயன்பாட்டு முகாமைத்துவம்.

iv. வர்த்தக ரீதியான மர வளர்ப்பு அபிவிருத்தி

v. சமூக/வேளாண்மை காடாக்கல் மற்றும் விரிவாக்கம்.

vi. காடுகளை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் அபிவிருத்தி.

vii. நிறுவன ரீதியான அபிவிருத்தி விலைகள்